பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆனி 19 | 03-07-94 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 135

## தேசியக்கொடி ஏற்றலுடன் கருப்புலிகள் நாள் ஆரம்பம்

கரும்புலிகள் நாளின்போது எமது தமிழீழ தேசியக்கொடியை சகல பாடசாலைகள், பொது நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகிய இடங்களில் அன்றைய தினம் காலை 8. 30 மணிக்கு முறைப்படி ஏற்றிப் பேணி, மலர் அஞ்சலி செய்து நமது தமிழீழத் தேசியத்தின் மகிமையைப் போற்றுவோம்! எமது விடுதலைப் போராட்ட மாவீரர்களை ஏற்றித் துதிட்போம்! அந்தக் காவிய நாயகர்களின் சாதனைகளின் (6ஆம் பக்கம் பார்க்க)

# கரும்புலிகள்நாளை எழுச்சியுடன் தமிழீழம் அனுஷ்டிக்க தயாராகிறது!

கரும்புலிகள் நாளை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு தமிழீழம் தயாராகி வருகிறது. இதற்கான சகல ஏற்பாடுகளும் நிறைவடையும் நிலையில் இருப்பதாக எமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசவி தலைப்போராட்ட வரலாற்றில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து உலகமே வியக்கும் வகையில் சாதனை படைத்த கரும்புலிகளை நினைவு கூரும் வகையிலும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் அனுஷ்டிக்கப்பட்டுவரும் கரும்புலிகள் நாளுக்கான சகல முன்னேற்பாடுகளும் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

குடாநாட்டின் நகரப் பகுதிகள் உட்பட கிராமப் பகுதிகள் அனைத்திலும் இவ்வாறான ஏற்பாடுகளை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. கரும்புலிகள் நாளை மக்களுக்கு அறிவிக்கும் வகையிலும் கரும்புலிகள் நாள் அனுஷ்டானங்களுக்கு எழுச்சியூட்டும் வகையிலும் அமைந்த வாசகங்களைத்தாங்கிய பதாகைகள் வீதிகள் தோறும் கட்டப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்லாமல் வீதிகளில் உலாவரும்மோட்டோர் வாகனங்கள் அனைத்தும் ''கரும் (6 ஆம் பக்கம் பார்க்க)

### கரும்புலிகள் உருவப்பட ஊர்திகள் பவனி

கரும்புலிகளின்உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தியானது இன்று காலை 10-00 மணிக்கு யாழ் பஸ் நிலையத்தில் இருந்து புறப்பட்டு யாழ். பலாலி வீதியூடாக உரும்பராய்ச்சந்தி மருதனார் மடச்சந்தி, சுண்ணாகம், தொட்டிலடிச்சந்தி சங்கானை, சித்தன்கேணி, சீரணிச்சந்தி, மானிப்பாய், ஆனைக்கோட்டையூடாகமீளவும் யாழ். மத்திய பஸ் நிலையத்தை வந்தடையும்.

இவ்வூர்தி வரும்போது மக்கள் வீதிகள் தோறும் அணிதிரண்டு, விளக்கேற்றி மலர்தூவி அஞ்சலிப்பர். இவ்வூர்தியுடன் இணைந்து காவடி நிகழ்வும் நடைபெறும்

### குருதிக் கொடை

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு இன்று காலை நோயாளர் நலன்புரி சங்கத்தின் அனுசரணையுடன் சாவகச்சேரி மருத்துவமனையில் குருதிக் கொடையளித்தல் நடைபெறுகிறது.

### மட்டு நகரில் தீ விபத்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தினால் ஏழு கடைகள் எரிந்து நாசமாகியுள்ளன. பிரதான வீதியின் முக்கிய சந்தியொன்றில் இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த பொலிசார் துரித நடவடிக்கை மேற்கொண்டதால் தீ மேலும் பரவுவது தடுக்கப்பட்டது

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாவட்ட ஐ. தே. க. வேட்பாளராக ஹேமா போட்டி

(கொழும்பு)

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலின் போது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமாபிரேமதாசா கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட இருப்பதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பு தெற்கு அல்லது கொழும்பு மத்தியை மையமாக வைத்துஇவர் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட இருப்பதாகவும் சிறிசேனகூரே கொழும்பு மத்தியை பிரதிநிதித்துவம்செய்து போட்டியிட தயங்கினால் கொழும்பு மத்தியை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் கொழும்பு மாவட்டத்தில் ஹேமா போட்டியிடுவார் என கட்சி வட்டாரங்களின் மூலம் மேலும் தெரியவந்துள்ளது.

இதே வேளை சஜித் பிரேமதாசா அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிடுவது உறுதி செய்யப்பட்டு விட்டதாகவும் ''திவயின'' மேலும் செய்தி வெளியிட்டுள்ளது.

### தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்துப் போட்டியிடும்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வடக்கு - கிழக்கில் தனித்துப் போட்டியிடப் போவதாக அதன் அமைப்புச் செயலாளர் தங்கத்துரை அறிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் தனித்துப் போட்டியிடுமாறு த. வி. கூட்டணியின் மாவட்டக் கிளைகள் கோரியதாலேயே தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியும் தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது.

புளொட், ரெலோ, சங்கர் ஈரோஸ் குழு என்பன கூட்டாகப் போட்டியிடுவது குறித்து ஆலோசித்து வருவதாகவும் அறிய முடிகின்றது

குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கி (6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் மாவட்ட தேர்தலுக்கு தமிழ்க் கட்சிகள் ஆட்சேபம்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல்களை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் ...

தமிழர் விடுதலைக் கூட்டணியும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும் கூட்டாக ஆட்சேபித்து உள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்ட...

...கின்றன வீதிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்பட முடியாத நிலையும் உள்ளது யாழ்ப்பாண மாவட்டத்தின் மொத்தவாக்காளர் தொகை

## பூநகரி தாக்குதலுக்கு துணைநின்ற 13 கருப்புலிகளுக்கு நினைவுக்கற்கள்

கடந்த வருடம் நவம்பர் ... நினைவாக நடுகற்கள் நாட் ... லெப். நல்லதம்பி, லெப்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 11-ம் திகதியன்று தமிழீழ விடுதலைப்புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு, சரித்திர நிகழ்வாகிவிட்ட பூநகரித் தளமீதான தவளை இராணுவ நடவடிக்கையின் போது அத்தாக்குதலுக் குப் பக்கத் துணையாகி பலாலி இராணுவத் தளத்தினுள் கரும்புலிகளாகப் புகுந்து சிறிலங்கா இராணுவத்திற்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது டன் எதிரிக்கு பேரதிர்ச்சியையும், உளப்பாதிப்பையும் ஏற்படுத்தி பூநகரி வெற்றிக்கு பெரும் பங்காற்றி வீரச்சாவடைந்த 13 கரும்புலிகள் நினைவாக நடுகற்கள் நாட்டப்படவுள்ளன.

இக் கரும்புலிகளில் யாழ். மாவட்டத்தில் வசிக்கும் குடும்பங்களான கரும்புலிகள் கப்டன் செந்தமிழ் நம்பி, கப்டன் ஐயனார், லெப். வீரமணி, லெப். செங்கண்ணன், லெப். நல்லதம்பி, லெப். கண்ணன் ஆகிய ஆறு மாவீரர்களின் வீடுகளிற்கு அந்தந்த மாவீரர்களது உருவப்படங்கள் இன்று காலை 9.00 மணிக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்

(6ஆம் பக்கம் பாாக்க)

# கரும்புலிகளின் நினைவாக "உயிராயுதம்" ஒளிநாடா

கரும்புலிகள் நாளை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் நிறுவனத்தினரால் 'உயிராயுதம்' எனும் ஒளிப்பதிவு நாடா வெளியிடப்பட்டுள்ளது.

இது விடுதலைப் போராட்டத்தில் அதி உன்னத சாதனைகளைப் படைத்து இதுவரை வீரச்சாவை அணைத்துக் கொண்ட 27 கரும்புலிகளின் காட்சிகள், நேர்காணல் உரையாடல், அவர்களது செயற்பாடுகள், தாக்குதல் நடக்கும்வரை, அசாவதுகுண்டுடன் சென்று எமது மக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தாக்குதலில் ஒரு பொலிசார் பலி

**- ஆயுதங்கள் மீட்பு**

மட்டக்களப்பு ஏறாவூரில் கடந்த 25ஆம் திகதியன்று பொலிசார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு பொலிசார் கொல்லப்பட்டார். இவரிடமிருந்து;

- ★ ரி-56 ரக துப்பாக்கி - 01
- ★ ரவைக் கூடு - 01
- ★ நடுத்தர ரவைகள் - 30

என்பன கைப்பற்றப்பட்டன.

# மேஜர் தொண்டமான் நெடுங்கேணியில் வீரச்சாவு

முல்லை மாவட்டம் நெடுங்கேணிப் பிரதேசத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் முல்லைக் கோட்ட துணைப் பொறுப்பாளர் மேஜர் தொண்டமான் (இந்திரன்) வீரச்சாவு அடைந்தார்.

கடந்த 30-ம் திகதி நெடுங்கேணிப் பிரதேசத்தில் சென்று கொண்டிருந்தபோதே சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இவ் எதிர்பாராத மோதல் ஏற்பட்டது.

இம் மோதலில் வீரச்சாவடைந்த முல்லைக் கோட்ட துணைப் பொறுப்டாளர் மேஜர் தொண்டமான்/இந்திரன் (சதாசிவம் கஜேந்திரன், பலாலி மத்தி, வசா



விளான்) எனும் போராளிக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை செலுத்துகின்றனர்.

## வீரச்சாவு

### வீரவேங்கை குமார் (காசியப்பன்)

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு கதிரவெளி வெருகம்புல் என்ற இடத்தை கடந்த 23-ம் திகதி காலை 8 00 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை குமார் | காசியப்பன் (சின்னையா குணரட்ணம், மட்டக்களப்பு) என்ற போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

புளொட், ரெலோ, சங்கர் ராஜி தலைமையிலான ... தற்கு தேர்தல் திணைக்களம் எடுத்துள்ள நடவடிக்கைளை ஆட்சேபித்து உள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் தலைமையில் தேர்தல் ஆணையாளரைக் கடந்த வியாழனன்று சந்தித்த தூதுக்குழு இது பற்றி மேலும் குறிப்பிடுகையில் யாழ் மாவட்டத்திற்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான இடமாக தெல்லிப்பழை குறிப்பிடப்பட்டுள்ளது இப்பகுதி இராணுவ கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதியாக இருப்பதுடன் இங்கு அடிக்கடி மோதல்களும் இடம்பெற்று வரு ... மொத்தவாக்காளர் தொகை ஆறு லட்சத்திற்கும் அதிகமாக இருக்கின்ற அதே வேளைஇராணுவகட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஆறாயிரத்திற்கும் குறைவானவர்களேவாழ்கின்றனர் இந்த நிலையில் ஆறாயிரத்திற்குமகுறைவான வாக்காளர்களைக் கொண்டு முழு யாழ்ப்பாண மாவட்டத்திற்குமான பிரதிநிதிகளை தெரிவு செய்வது பொருத்தப்பாடானது அல்ல இதனால் அம் மாவட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

# தினேஷ் குணவர்த்தனா ஏமாற்றத்துடன் சென்றார்

(கொழும்பு)

பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும், மக்கள் ஐக்கிய முன்னணிக்கும் இடையில் தேர்தல் கூட்டுப்பற்றி நடைபெறவிருந்த சந்திப்பு ஒன்று, பொது மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் சந்திக்கவிருந்த சந்திரிக்கா குமாரணதுங்கா வருகை தராததால் ஒத்தி வைக்கப்பட்டது.

தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி, பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் தேர்தல் கூட்டுபற்றி முடிவெடுக்க இச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

சுமார் ஒருமணிநேரம் தினேஷ் குணவர்த்தனா காத்திருந்து திரும்பவேண்டி இருந்தது பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் கூட்டுப் பற்றிய உடன்பாடு ஏற்படாத பட்சத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி தனித்துப் போட்டியிடுவது பற்றி சிந்திக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வடபகுதி தேர்தல் குறித்து தேர்தல் திணைக்களம் யோசனை

(கொழும்பு)

வடக்கில் இராணுவக் கட்டுப்பாடில்லாத பகுதிகளில் தேர்தலை நடாத்துவது குறித்து தேர்தல் திணைக்களம் இதுவரை தீர்க்கமான முடிவு எதனையும் எடுக்கவில்லையென்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை மேற்படி விவகாரம் தொடர்பாக வடபகுதி அரச அதிபர்கள் சிலரையும் தேர்தல் திணைக்கள அதிகாரிகளையும் தேர்தல் ஆணையாளர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். எனினும் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

# தேர்தல் முறைப்பாடுகள் பதிய விசேட கருமபீடம்

தேர்தல் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்காக சகல பொலிஸ் நிலையங்களிலும் விசேட கருமபீடம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இக் கருமபீடத்தில் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான புத்தகங்கள் வைக்கப்படவுள்ளது.

இந்நிலையங்களில் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை உடனடியாக விசாரணை செய்வதற்கும் தனியான பிரிவு ஒன்றும் உருவாக்கப்படவேண்டும் என்றும் பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

# வடக்கு-கிழக்கில் 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்வு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தம் காரணமாக 5, 52 000க்கும் அதிகமானவர்கள் இடம்பெயர்ந்து இருப்பதாகவும், இவர்களைப் பராமரிக்க மாதாந்தம் 20 கோடி ரூபா செலவிடப்படுவதாகவும், சிறிலங்கா அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

1, 46,000 குடும்பங்கள் இடம் பெயர்ந்து இருப்பதாகவும், இவர்களில் 1,70,000 பேர் 488 சேமநல நிலையங்களில் தங்கி இருப்பதாகவும் புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

**கொட்டாஞ்சேனை வெடிகுண்டு**

# வாகன வாடகை விகாரைக்கு கிடைத்தது

(கொழும்பு)

கடந்த வியாழனன்றுகொட்டாஞ்சேனையில் கண்டுபிடிக்கப்பட்ட வெடிகுண்டு பொருத்தப்பட்ட வாகனமானது கைப்பற்றப்பட்ட இடத்தில் தினமும் நிறுத்துவதற்காக மாதாந்தம் 400ரூபா செலுத்தப்பட்டு வந்தது எனவும்,

வாகனம் நிறுத்தப்பட்ட இடத்துக்கு அருகிலுள்ளவிகாரைக்கே இவ்வாடகைப்பணம் வழங்கப்பட்டு வந்தது எனவும் இந்த வான் வாரமொருமுறை வெளியில் எடுத்துச் செல்லப்படும் எனவும் வெளியே எடுக்கப்படாத பட்சத்தில் வான் வாரமொருமுறை இயக்கிப் பார்க்கப்பட்டு வந்ததாகவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

வெடிகுண்டு வாகனத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு ரகமானது அமெரிக்க இராணுவத்தினர் பயன்படுத்துவதாகும் எனவும்.

வடபகுதி மீது பாரிய இராணுவத் தாக்குதல் நடாத்தும் பட்சத்தில் இராணுவ

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்

# வரி விளம்பரம்

### மிருதங்கம்

ஒரு மிருதங்கத்துக்கு சாதம் போட ரூபா 100. புதிய மிருதங்கங்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்- சோவிந்தபிள்ளைவிஜயகுமார் 192/1 நாவலர் வீதி பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம். (8678)

### A/L இந்துசமயம் 9 வருட வினாத் தாள்கள்

இந்துசமயம் கடந்த கால 9 வருட வினாத்தாள்களின் தொகுப்பு (பகுதி I பகுதி II) சகல பிரபல புத்தக நிலையங்களிலும் விற்பனைக்கு வந்து விட்டது. (8704)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள், லேஸ், நூல் வகைகள், எவர் சில்வர், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள ஜெயா அழகு மாடம் 187, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம் (சி-9900)

### ஆரம்பவிழா

வித்தகர் விபுலானந்த சங்கத்தின் ஆரம்பவிழா இன்று கல்வியங்காடு ஞான பாஸ்கரோதய சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில், பேராசிரியர் அ. சண்முகதாஸ், முன்னாள் விரிவுரையாளர் சு. சொக்கலிங்கம் விரிவுரையாளர் தி. கமலநாதன், இளைப்பாறிய அரச ஊழியர் கல்லியூர் க. நடராஜா, பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் இ. க. நடராஜா, சிரேஷ்ட விரிவுரையாளர் சி. சிவலிங்கராசா ஆகியோர் உரைநிகழ்த்தவுள்ளனர்.

### வலை பந்தாட்டம்

(கொழும்புத்துறை)

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய 75 ஆவது ஆண்டு நிறைவு பவள விழாவினை முன்னிட்டு இன்றும் வலைப்ந்தாட்டப் போட்டிகள் நடைபெறும்.

இந் நிகழ்வு காலை 8.30 மணி தொடக்கம் மாலை வரை இடம்பெறும். (24)

# வேட்பாளர் தெரிவுகளில் அரசியல் கட்சிகள் தீவிரம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர் தெரிவுகளில் அரசியல் கட்சிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. நியமனப் பத்திரங்கள் நாளை முதல் ஏற்கப்படும்.

அரசியற் கட்சிகளின் கருத்துப்படி படித்த இளைஞர்கள் உட்பட ஏராளமான புதியவர்கள் இம்முறை களத்தில் இறங்கவுள்ளனர்.

ஐ. தே. கட்சி நாட்டின் சகல தேர்தல் மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தவுள்ளதாகவும், வேட்பாளர் தெரிவு நேற்று முன்தினம்ஆரம்பமானது எனவும் தெரியவருகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும் சகல தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிடுவதாகவும், வேட்பாளர் தெரிவு முடிவுறும் நிலையிலிருப்பதாகவும் அதன் பொதுச் செயலாளர் ஜயரத்னா அறிவித்துள்ளார்.

மகாஜன எக்சத் பெரமுன பொதுச் செயலாளர் பியசேன திசாநாயக்கா தமது கட்சித் தேர்தல் குழு வேட்பாளர் தெரிவை மேற்கொண்டுள்ளதாகதெரிவித்துள்ளார்.

ஈ. பி. ஆர். எல். எப் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள சகல தேர்தல் மாவட்டங்களிலும் தமது கட்சி போட்டியிடும் எனக் கூறியுள்ளார்.

### நகைகள் திருட்டு

(தொல்புரம்)

தொல்புரம் கிழக்கு வழக்கம்பரையிலுள்ள வீடொன்றில் நள்ளிரவுவேளை பல ஆயிர கணக்கான ரூபாய் பெறுமதிவாய்ந்த தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது; 29ஆம் திகதி நள்ளிரவுவேளை மேற்குறித்த வீட்டினுள் புகுந்த கொள்ளையர் உடுப்புப்பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த நகைகளுடன் பெட்டியை தூக்கி சென்றுள்ளனர். பின்னர் உடுப்புகளுடன் பெட்டியை அநாதரவாக வீசிவிட்டு நகைகளை கொள்ளையடித்துசென்றுள்ளதாக அறியப்படுகிறது. சுழிபுரம் சத்தியகாடுபொதுச் சந்தை அமைந்துள்ள பகுதிக்கு அண்மையாக அநாதரவான நிலையில் காணப்பட்ட உடுப்புப்பெட்டியைசங்கானை காவல்துறையினர் மீட்டுள்ளனர் எனவும். இதுபற்றி தொடர்ந்து புலன்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரியவருகின்றது. மேலும் காரைநகர் இலந்தைச்சாலையில் இருந்து இடம் பெயர்ந்து தற்போது தொல்புரம் கிழக்கில் வசித்து வந்த நடராசா லலிதாதேவி என்பவரின் தங்க நகைகளே கொள்ளையடிக்கப்பட்டவையாகும். (41)

### சான்றிதழ் வழங்கப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் யாழ் பல்கலைக்கழக புற நிலைப் படிப்பு அலகினரும்இணைந்து நடாத்திய உணவு முகாமைத்துவ கற்கை நெறி கடந்த 18.06.1994ல் முடிவடைந்தது. இக்கற்கை நெறியில் யாழ் நல்லூர் வர்த்தக சங்கத்திற் குட்பட்ட உணவகங்களின் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர். இப் பயிற்சி நெறியினை பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த 19.06.94 (ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். இறுதியாக கலைப்பீடாதிபதி திரு. பொ. பாலசுந்தரம்பிள்ளை பயிற்சி நெறியில் கலந்து கொண்டோருக்கான சான்றிதழினை வழங்கினார்.

### எறிகணை வீச்சு

(தென்மராட்சி)

பூநகரிப் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கடும் எறிகணைத் தாக்குதல்களையும், கலிபர் தாக்குதலையும் நடத்தினர்.

கடந்த வியாழன் இரவு 9.30மணியளவில்பூநகரிப்பகுதியில் இருந்து கடும் எறிகணைகள் சத்தங்கள் கேட்டன இதன்போது துப்பாக்கிச்சமர் சுமார் அரை மணிநேரம் தொடர்ச்சியாக கேட்டவண்ணம் இருந்தது.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி

# நினைவு கூருகின்றோம்...

## 03. 07. 1994

1987-ம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**குஞ்சு** (ம. அருள்தாசன் - மட்டு)

அம்பாறை - திருக்கோயில், தாண்டியடிப்பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின்போது வீரச்சாவெய்திய,

**லக்கி** ( - - கருவேப்பங்கேணி - மட்டு)

அம்பாறை-தாண்டியடியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**எஸ்.பி ( - - - - )**

**சலீம் ( - - - - )**

**சின்னத்தம்பி ( - - - - )**

மட்டுநகரில் கோயில் திருவிழாவில் கலந்துகொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூட்டில் கொல்லப்பட்ட 17 தமிழர்கள், படுவான்கரை-பாவற்கொடிச்சேனைப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

1988-ம் ஆண்டு மட்டு-காளைபோட்டமடுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**2-ம்லெப். சங்கிலி-சஞ்சீவி** (காசுபதி வடிவேல் - ஆரையம்பதி - 03 - மட்டு)

மட்டு-ஆரையம்பதிப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதசக்திகளினால் அடித்துக் கொலைசெய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**நொபேட்** (நல்லையாசிறிபாலன்-ஆரையம்பதி-மட்டு)

கிளி-வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம்லெப்.ரவியம் மான்** (சுயம்பு தெய்வேந்திரம் - ஓமந்தை)

முல்லைத்தீவு - விசுவமடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**2-ம்லெப்.மரியா** (புவனேந்திரசோதி புலேந்திரன் - சித்தன்கேணி, வட்டுக்கோட்டை - யாழ்)

மணலாறு-அளம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ராதை** (விக்கினேஸ்வரி கணேசு-இராச வீதி, கரந்தன் சந்தி, நீர்வேலி - யாழ்)

மணலாறு-நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண், குழந்தை ஆகிய இரு தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு புளியங்குளத்தில் இந்தியப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**விஜி** (க. சந்திரகாந்தன் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

மாவிட்டபுரம் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுப்பலியான நாட்டுப்பற்றாளர்,

**சுப்பிரமணியம் பரந்தாமன்** (அரசடிவீதி, மாவிட்டபுரம்)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்

உ
திருவருள் துணை

## 7-ம் வருட நினைவஞ்சலி



அன்னைதிருமடியில்
1907-10-01

ஆண்டவன்திருவடியில்
1987-06-20

திதி
1994-07-03

அமரர்

## திருமதி ஆச்சிக்குட்டி சின்னத்தம்பி

(1948-12-05-ல் சிவபதமடைந்த இநபாலை வாகட முறைப் பரம்பரை வைத்தியர் சிவதிரு. வல்லிபுரம் சின்னத்தம்பியின் பிரியபத்தினி)


வள்ளுவன் வகுத்த வழியில் வாழ்வாங்கு வாழ்ந்து,
'தாயிற் சிறந்ததோர் கோவிலுமில்லை' எனும்
தாரக மந்திரத்தின் உண்மையை உணர்த்தி
எமை நல்வழிப்படுத்திய உத்தமதாயின்
ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்.

'விஜய வாசம்'
யாழ் வீதி,
காங்கேசன்துறை.

(8500)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
1967.12.29

தமிழீழ மண்ணில்
1990.7.03

## மேஜர் பவான்

### சாந்தலிங்கம் நாகேந்திரராஜா

அண்ணனின் சேனையில் அணிதிரண்டாய்
பவான், அங்கு அன்னியன் சிரங்கள்
பல சிதைத்தாய் எம் இனம் வாழ
வழி சமைத்தாய், நீ
மண்ணினைக்காக்க மாவீரன் ஆனாயே

03-7-94 இன்று இல்லத்தில் நடைபெறும் கிரிகையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், சகபோராளி நண்பர்கள்

இந் நிகழ்வு காலை 8.30 மணி தொடக்கம் மாலை வரை இடம்பெறும். (24)

## ஒப்பந்த ஆசிரியர் விபரம் கோரப்படுகிறது

(நல்லூர்)

யாழ். கல்விவலயம் 2ன் கீழ் இயங்கி வரும் கோட்டக்கல்விப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஒப்பந்த அடிப்படையிலுள்ளவர்களின் விபரங்களை தமக்கு 15/7/94 ற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு யாழ் கல்வி வலயம் 2 ற்கான கல்விப்பணிப்பாளர் க. கந்தசாமி சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் இதற்கான படிவங்களை அனுப்பி வைத்துளர். (17)

## சு.கட்சியில் இணைவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி செயலாளராக கடமையாற்றிய அனுராட்ணாயக்கா நேற்று முன்தினம்சுதந்திரக்கட்சியில் சேர்ந்துகொண்டார்.

தனது பெரும் தொகையான ஆதரவாளர் சகிதம் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சி தலைவி இல்லத்தில் இவர் தனது கட்சிஉறுப்பினர் அங்கத்தவர் பத்திரத்தை பெற்றுகொண்டார்.

இதேவேளை அவிசாவளை தேர்தல்பிரசார கூட்டத்தில் தன்னை கொலை செய்யப் போவதாக தொலை பேசி மூலம் பலதடவைகள் அச்சுறுத்தி வந்ததாக ஐ. தே. கவை விட்டுவிலகி நேற்று முன்தினம் சுதந்திரகட்சியில் இணைந்த அனுராரட்ணாயக்கா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இவ்வாறு கொலை மிரட்டல் வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



**N. R. சின்னராசா**

**(தவில் மேதை)**

| பிறப்பு | திதி: | உதிர்வு |
| --- | --- | --- |
| 24.3.1934 | 03.7.1994 | 06.7.1991 |

மூன்று வருட பிரிவு
எங்கள் - இதயங்களில் -
கண்ணீராக கசிகிறது!
உன் ஞாபகங்கள்
என்றுமே-
எம்மை விட்டுப் பிரியா.....

கந்தசாமி, கோவிலடி,
இணுவில்,

-குடும்பத்தினர்.

(சி-9730)

ட்டபுரம்)

வவுனியா - ஓமந்தைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

கிளிநொச்சிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு திருமலை - சூரன்கல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் பவான்** (சாந்தலிங்கம் நாகேந்திரராசா - 3ஆம் கொலனி, கிளிவெட்டி - திருமலை)

**வெற்றி** ( - தியாகராசா - கன்னியா - திருமலை)

**ரஜனி** (நடேசலிங்கம் சங்கர்- தம்பலகமம் - திருமலை)

**பல்லவன்** ( நடராசா யோகராசா - நொச்சிகுளம் - திருமலை)

**லெப். கபாலி** (தாவீதுப்பிள்ளை நாகராசா 3ஆம் வட்டாரம், பேசாலை - மன்னார்)

அம்பாறை-கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 10 தமிழர்கள்,

மட்டுநகரில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின் எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட 05 தமிழர்கள். கதிரவெளிப் பகுதியில் சிறிலங்கா படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுவன், பெண் உட்பட 3 தமிழர்கள்.

1992-ம் ஆண்டு பூநகரி - மான் தீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய,

**லெப். திருவருள்** (தம்பையா கைலநாதன்-வேராவில் - பூநகரி)

**2-ம் லெப். கதிர்ச்செல்வன்** ( திமோர் தேயு யேசுதாசன் - வலைப்பாடு - பூநகரி)

**கப்டன் சிவகாந்** (சுப்பிரமணியம் நித்தியானந்தன் - உடுத்துறை வடக்கு - தாளையடி - யாழ்)

**2-ம் லெப். வில்வம்-மறவன்** (ஜெயபால் பெர்னான்டோ பீலிக்ஸ்றெனால்ட் - வெற்றிலைக்கேணி)

மட்டு - முஸ்லிம் குடியிருப்பில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து மேற்கொண்டு தாக்கியபோது வீரச்சாவெய்திய,

**றொசான்-யுகதீபன்** (நாகையா ரவிச்சந்திரன் - பாலையடி மடு - முகத்துவாரம் - மட்டு)

திருமலை - பன்குளம் வீதியில் சிறிலங்கா விமானப்படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**லெப். நீலவாணன்-மோகன்தாஸ்** (பாலசுந்தரம் பாலச்சந்திரன் - சாம்பல்தீவு - திருமலை)

வெற்றிலைக்கேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**கப்டன் மருதவாணன்-உமேஷ்** (கந்தசாமி மணிமாறன் - திருஞானசம்பந்தர் வீதி - திருமலை)

**லெப். ரமணன்** (காளிமுத்து முருகானந்தம் - பிள்ளையார் பிட்டி, அடம்பன் - மன்னார்)

**அறிவழகு** (சுப்பிரமணியம் செந்தில்நாதன்-நாவற்குளம், ஓமந்தை - வவுனியா)

**லெப். ராஜேஷ்** (கந்தையா சிறிசுதாகர் - ஆழியவளை - தாழையடி - யாழ்)

**2-ம் லெப். கரன்** (செல்வராஜா மருமகுமார் - நீர்வேலி தெற்கு - யாழ்)

**கலைக்கொடி** (அம்பிகாதேவி நடராஜா - கோவில் தோட்டம், அல்வாய் - பருத்தித்துறை)

**செந்தில்** (சின்னத்துரை சிறிபத்மராசா - ஊரெழு கிழக்கு - சுண்ணாகம்)

**இயல்வாணன்- கஸ்ரோ** (சோமசுந்தரம் கமலநாதன் வாரிவளவு, காரைநகர் - யாழ்)

முல்லைத்தீவு - -ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானக்குண்டு வீச்சின் போது, பலியான இடம்பெயர்ந்த - மணலாறு - குமுழமுனையைச் சேர்ந்த 04 தமிழர்கள்.

1993ஆம் ஆண்டு மட்டு- வெல்லாவெளி. தளவாய்ப் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். வேல்நாயகம்-சித்திரன்** (கந்தையா சித்திரன் -வீரமுனை, சம்மாந்துறை-மட்டு)

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9724)

03-7-94 இன்று இல்லத்தில் நடைபெறும் கிரிகையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், சகபோராளி நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரப்படி லேன்
1?/6 தலையாளி
கொக்குவில் கிழக்கு

-குடும்பத்தினர்

(சி-9731)

## வலயம் -01 வலைப்பந்தாட்டப் போட்டி

# சுண்டிக்குளி மகளிர் கல்லூரி சம்பியன் பட்டங்களை வென்றது

வைத்தீஸ்வராக்கல்லூரியில் நடைபெற்ற யாழ் கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட வலயம் ஒன்றிற்கான 17 வயதிற்குட்பட்ட, 19 வயதிற்குட்பட்ட வலைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் இரண்டிலும் சுண்டிக் குளி மகளிர்கல்லூரி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றுள்ளது.

17 வயதுக்குட்பட்ட பிரிவு ஆட்டத்தில் இவர்கள் 15:13 என்ற புள்ளிக் கணக்கில் வேம்படி மகளிர் கல்லூரியை வென்று கிண்ணத்தைத் தட்டிச் சென்றார்கள். இரு அணிகளும் விட்டுக் கொடுக்காது போட்டியிட்டபோதும் இடைவேளையின் போது சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியினர் 9:6 என்றவாறு முன்னணியில் நின்றனர். இருந்தும் ஆட்டத்தின் இறுதி அரைப் பகுதியின் போது வேம்படி மகளிர் கல்லூரி தமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களைத் தவறவிட்டனர். ஆனால் சுண்டிக்குளி அணியினர் கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப்பயன்படுத்திக்கொண்டனர் இவ்வாட்டத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியின் றுசில்லா பெனடிக்ட், அஜந்தா வேம்படி மகளிர் கல்லூரியின் எஸ். சுஜீவா, வி.விஜயபிரபா ஆகியோர் மிகத் திறமையாக ஆடினார்கள்.

தொடர்ந்து நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட பிரிவினரின் இறுதியாட்டம் மிகப் பரபரப்பானதாக அமைந்தது. கடும்போட்டியொன்றின் பின்னரே தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட கன்னியர்மடம் தமிழ்வித்தியாலயத்தை 22:21 என்றவாறு சுண்டிக்குளி தோற்கடிக்க முடிந்தது.

இடைவேளை வரையும் அதன் பின்னும் கன்னியர் மடம் தமிழ்வித்தியாலயஅணியினர் வெற்றியை ஒரு ஸ்திரமான நிலைக்குக்கொண்டுவந்திருந்தார்கள். ஆனால் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியினர் மனஞ்சோராது விளையாடி ஆட்ட நிறைவிற்கு 2 நிமிடங்கள் இருக்கும் போது புள்ளிகளை 21:21 என்றவாறு சமப்படுத்தினர். இந்நிலையில் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடியும் என்ற ஒரு நிலையில் இறுதி 30 வினாடிகள் மட்டும் இருக்கும் போது பிரபாலினி பெற்றுக் கொடுத்த ஒரு புள்ளி அவர்களை வலயம் ஒன்றின் வெற்றி வீராங்கனைகள் ஆக்கியது தமிழ்க் கன்னியர் மடத்தின் மேரி விஜயலியஸ், எஸ். கிருபாலினி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியின் காஞ்சனா, பிரபாலினி ஆகியோரின் திறமை மிகுந்த விளையாட்டு அனைவராலும் பாராட்டப்பட்டது.



17 வயதிற்கு கீழ்ப்பட்ட சுண்டிக்குளி மகளிர் அணி

# பெரும்பலம்பொருந்திய அணிகளையே இறுதி ஆட்டங்களில் சந்தித்தோம்

## சுண்டிக்குளி வலைப்பந்தாட்ட அணித்தலைவர்கள்

யாழ். கல்வித்திணைக்கள வலயம் ஒன்றின் வலைப்பந்தாட்ட சாம்பியன்களான சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் 17,19 அணிகளின் தலைவிகள் றுசில்லா பெனடிக்ட், ம. காஞ்சனா ஆகியோரையும் பயிற்றுநர் திருமதி ஹரிகரனையும் சந்தித்து அவர்களின் சாதனை தொடர்பாக உரையாடினோம்; இதற்கான அனுமதியை கல்லூரி அதிபரிடம் கோரிய போது விருப்புடன் அனுமதித்தார்.

17 வயதுப் பிரிவு அணித் தலைவி றுசில்லா பெனடிக்ட்டிடம் அவர் சந்தித்த அணிகள் பற்றி வினவியபோது கால் இறுதி ஆட்டத்தில் இருந்து இறுதியாட்டம் வரை தாம் சந்தித்த கொக்குவில் இந்து, கனகரத்தினம் ம-வி, வேம்படி மகளிர் கல்லூரி மூன்றுமே திறமையான அணி

**நிர்மலன்**

கள் என்பதைக் குறிப்பிட்டார். இறுதியாட்டத்தில் இடைவேளை வரை வேம்படி முன்னணியில் இருந்ததாகவும், தமக்கு அவர்கள் பெருஞ் சவாலாக இருந்ததாகவும் கூறிய அவர், இடைவேளையின் பின் தாங்கள் திறமையாகவும், சாதுரியமாகவும் விளையாடியதால் வேம்படியை வெற்றி கொள்ள முடிந்தது என்று கூறினார். தங்கள் அணியில் எல்லோரும் திறமை மிகுந்தவர்கள் என்பதைக் கூறும் றுசில்லா, அஜந்தாவின் வீச்சான விளையாட்டு தமக்கு கூடுதல் பலம் என்பதையும் குறிப்பிட மறக்கவில்லை. தொடர்ந்து வரப்போகும் மாவட்டமட்டப் போட்டிகள் பற்றி வினவியபோது, அது இலகுவாக இருக்கும் எனத்தான் நம்பவில்லையெனவும், இதற்காக இப்போதிருந்தே கடுமையான பயிற்சிகளில் தம் அணியினர் ஈடுபட்டு வருவதாகவும் கூறுகின்றார்.

இம் முறை வலயம் ஒன்றின் சாம்பியன் களாக வர முடிந்தமைக்கு தம் அணியினர் பரிபூரண ஒத்துழைப்பு ஒரு காரணம் என்று கூறும் இவர் தங்களைநெறிப்படுத்திய பயிற்றுநருக்கு நன்றி கூறுகின்றார். அதிபரின் பரிபூரண ஒத்துழைப்பும், பயிற்றுநரின் தீவிர பயிற்சியும் தமது வெற்றிக்குக் காரணங்கள் என்கின்றார் அணித்தலைவி றுசில்லா.

தொடர்ந்து 19 வயதிற்குட்பட்ட பிரிவுத் தலைவி ம. காஞ்சனாவுடன் உரையாடினோம். இவர் கடந்த வருடம் 17 வயதிற்குட்பட்ட பிரிவில் அணித்தலைவியாக இருந்தவர் ''17 வயதுப் பிரிவில் எமது அணி சாம்பியன் ஆகிவிட்டது. எனவே நாம் கிண்ணத்தை விட்டு விடலாமா? என்றதொரு அழுத்தத்துடன் தான் ஆட ஆரம்பித்தோம்'' என்று ஆரம்பிக்கிறார் இவர். மேலும் கன்னியர் மடம் தமிழ் வித்தியாலயம் மிகத்திறமையான அணி என்றும் கூறுகின்ற இவர் எப்படியாவது வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றே தீருவது என்றுதீர்மனித்தேன் என்கிறார். விளையாட்டின் முதல் அரைப்பகுதியில் அவர்களே முன்னணியில் இருந்தார்கள்ஆனால்இடைவேளையின் பின் நாங்கள் மேவினோம், இறுதி வெற்றிக்குக் காரணம் எமது ஆற்றல் வாய்ந்த வீராங்கனைகள் தான் இறுதி சில செக்கன்களில் அற்புதமாக பிரபாலினி பெற்ற புள்ளி எமக்கு வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுத் தந்தது'' என்கிறார்.

மாவட்டப் போட்டிகள் பற்றி வினவியபோது ''ஆற்றல் வாய்ந்த அணிகளுடன் மோதும் நிலை ஏற்படும். அது இலகுவாக இராது எனினும் நிறையவே பயிற்சிகள் செய்கின்றோம். பயிற்றுநரும் எம்முடன் சேர்ந்து உழைக்கிறார். பயிற்றுநரை எவ்வளவு குறிப்பிட்டாலும் போதாது அந்தளவு எமக்கு முழுப்பலம் தருபவர் அவரே எனும் காஞ்சனா, அதிபர் தருகின்ற ஒத்துழைப்பு மிகவும் பெரியது என்று நன்றியுடன் கூறுகின்றார்.

பயிற்றுநர் திருமதி. ஹரிஹரனிடம் கல்லூரியின் வெற்றியைப் பற்றிக் கேட்டோம். தம் வெற்றிக்காக பெரிதும் மகிழும் அவர் தம் மாணவிகளின் பணிவு, பயிற்சி பெறும் விருப்பு, ஆற்றல் போன்றவற்றையிட்டு பெரிதும் திருப்தி தெரிவித்தார் ''யாழ்ப்பாணத்தில் இவ் விளையாட்டு குறைவாகவே விளையாடப் படுகின்றது அதே வேளை புதிய புதிய நுட்பங்களைக் கற்பிக்க வசதிகளும் குறைவாக இருக்

(4ஆம் பக்கம் பார்க்க)



19 வயதிற்கு கீழ்ப்பட்ட சுண்டிக்குளி மகளிர் அணி

# விளையாட்டு அரங்கு

ஆறுபேர் கொண்ட கிரிக்கெட் ஆட்டம்

## உலகக் கிண்ணம் 94 முதற் சுற்றின் முடிவில்

24 நாடுகள் கலந்து கொண்ட முதல் சுற்றில் ஒவ்வொரு நாடும் தலா மூன்று ஆட்டங்களில் கலந்து கொண்டன. இவ்வாட்டங்களில் நாடுகள் பெற்ற இறு

## உலகப் போட்டியில் இருந்து தாயகம் திரும்பும் 8 அணிகள்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியின் முதல் சுற்று முடிவடைந்துவிட்டது. 24 நாடுகளில் 16 நாடுகள்

உலகக் கிண்ணப் போட்டிகளில் அவர்கள் சோபிப்பதில்லை என்பதற்கிணங்க இம்முறையும் தகுதி பெறத்

### ஆறுபேர் கொண்ட கிரிக்கெட் ஆட்டம்

# ஒரேற்றர் வெற்றிக் கிண்ணத்தை ஜொனியன்ஸ் சுவிகரித்தது


சரா சேது விப ஒபிட் நிறுவனங்கள் நடாத்திய முன்னாள் சுன்ணாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஒரேற்றர் சி. சுப்பிரமணியம் ஞாபகார்த்த கிரிக்கெட்சுற்றுப்போட்டி நிறைவடைந்துள்ளது. இத்தொடரின் இறுதியாட்டம் ஸ்கந்தா மைதானத்தில் 19-6-94ல் நடைபெற்றது. இதில் மானிப்பாய் பரிஷ் அணியினருடன் ஜொனியன்ஸ் அணியினர் மோதி வெற்றிக்கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

ரசிகர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் 6 பேர் கொண்ட 5 பந்து பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டமாக இது அமைந்திருந்தது முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணியினர் தமக்கு ஒதுக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்கு இழப்பிற்கு 45 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். இதில் பிரசாந்தன் 16 ஓட்டங்களும் சிவசுதன் 13 ஓட்டங்களும் குறிப்பிடத்தக்கவையாகும் எனினும் பலம் வாய்ந்த ஜொனியன்ஸ் இன்னும் ஓட்டங்களை பெற்றிருக்க வேண்டும் இதைத் தடுத்தது மானிப்பாய் பரிஷ் அணியின் பந்துவீச்சாகும். குறிப்பாக சுதர்சன் தன் பந்துப் பரிமாற்றத்தில் 4 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்திருந்தார்.

தொடர்ந்து தம் முதலாவது இனிங்சை ஆரம்பித்த மானிப்பாய்பரிஷ்அணியினர்3 இலக்குஇழப்பிற்கு 39 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள் மானிப்பாய் பரிஷ் அணியினர்முதல் பந்து பரிமாற்றத்தில் பரபரப்பைஏற்படுத்தினர் ஆயினும்பின்னர்சோபிக்கவில்லை. திலக்ராஜின் 22 ஓட்டங்களும்பிரபாகரன் 6 ஓட்டங்களும்பெற மிகுதி உதிரியோட்டங்களாக அமைந்தன. இந்த இனிங்சில் சூரியகுமார் கன்னிப் பந்துப் பரிமாற்றத்தில் இரண்டு இலக்குகளையும் சரித்தது அவரின் திறமையை வெகுதுலாம்பரமாக எடுத்துக்காட்டியது.

தொடர்ந்துதம் இரண்டாவது இனிங்சை அதிரடியாக ஜொனியன்ஸ் ஆரம்பித்து 1 இலக்கினைமட்டும் இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சுதேசனின் நேர்த்தியான ஆட்டம் இங்கு குறிப்பிடப்பட வேண்டும் ஒரு 6 நான்கு 4 என்று மிக வேகமாக ஓட்டங்களைக் குவித்துவிட்டார். அவர் ஆட்டம் 34 ஓட்டங்களுடன் ஆட்டம் இருக்கும்போது அணியின் மொத்த எண்ணிக்கை 47 ஆக இருந்தது இவரின் சோடியாக ஆடிய காண்டீபன் மறுமுனையில் அபாரமாக ஆடி ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களைப் பெற்றார் இவரும் தன் பங்கிற்கு ஒரு ஆறு இரண்டு 4 என்ற வகையில் பெற்றுக்கொண்டார்.

மானிப்பாய் பரிஷ்அணிதம் இரண்டாவது இனிங்சை ஆரம்பிக்கும்போது தாம்வெற்றிபெற 76 ஓட்டங்களை 5 பந்துப் பறிமாற்றங்களில் பெறவேண்டிய அழுத்தமான நிலையில் தம் ஆட்டத்தை ஆரம்பித்தனர் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக வந்தகெங்காதரன் 10 ஓட்டங்களை மட்டும் பெற முடிந்தது ஏனைய வீரர்களால் சோபிக்க முடியவில்லை ஜொனியன்ஸ் அணியினரின் திறமையான பந்துவீச்சின் முன்னால் மானிப்பாய் பரிஷ் அணி முற்றாக செயலிழந்து நின்றது மானிப்பாய் பரிஷ் அணியினர் முதல் பந்து பரிமாற்றங்களில் அடித்தாட முடியாமல் போனது அவர்களுக்குப் பாதகமாக அமைந்திருக்கலாம் என்று ரசிகர்கள் அபிப்பிராயப்பட்டார்கள் இவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட 5 ஓவர்களில் 30 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டார்கள் இறுதியில் 94.க்கான ஒறேற்றர் சுப்ரமணியம் முதலாவதுவெற்றிக்கிண்ணத்தை ஜொனியன்ஸ் பெருமையுடன் தமதாக்கிக் கொண்டார்கள்.



24 நாடுகள் கலந்து கொண்ட முதல் சுற்றில் ஒவ்வொரு நாடும் தலா மூன்று ஆட்டங்களில் கலந்து கொண்டன. இவ்வாட்டங்களில் நாடுகள் பெற்ற இறுதிப் புள்ளி அட்டவணை தரப்படுகின்றது. இதில் இருந்து 16 நாடுகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறும்.

| பிரிவு 'A' | வெற்றி | தோல்வி | சமம் | புள்ளி |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 1 | 1 | 1 | 4 |
| சுவிட்சர்லாந்து | 1 | 1 | 1 | 4 |
| கொலம்பியா | 1 | 2 | 0 | 3 |
| ருமேனியா | 2 | 1 | 0 | 6 |
| பிரிவு 'B' | | | | |
| கமரூன் | 0 | 2 | 1 | 1 |
| சுவீடன் | 1 | — | 2 | 5 |
| பிரேசில் | 2 | — | 1 | 7 |
| ரஷ்யா | 1 | 2 | — | 3 |
| பிரிவு 'C' | | | | |
| ஜேர்மனி | 2 | — | 1 | 7 |
| பொலிவியா | — | 2 | 1 | 1 |
| ஸ்பெய்ன் | 1 | — | 2 | 5 |
| தெ.கொரியா | — | 1 | 2 | 2 |
| பிரிவு 'D' | | | | |
| ஆர்ஜென்ரீனா | 2 | 1 | — | 6 |
| கிரீஸ் | — | 3 | — | 0 |
| நைஜீரியா | 2 | 1 | — | 6 |
| பல்கேரியா | 2 | 1 | — | 6 |
| பிரிவு 'E' | | | | |
| இத்தாலி | 1 | 1 | 1 | 4 |
| அயர்லாந்து | 1 | 1 | 1 | 4 |
| நோர்வே | 1 | 1 | 1 | 4 |
| மெக்சிக்கோ | 1 | 1 | 1 | 4 |
| பிரிவு 'F' | | | | |
| பெல்ஜியம் | 2 | 1 | — | 6 |
| மொறோக்கோ | — | 3 | — | 0 |
| நெதர்லாந்து | 2 | 1 | — | 6 |
| சவூதி அரேபியா | 2 | 1 | — | 6 |

## இரண்டாம் சுற்றுக்குத் தெரிவான நாடுகள்

(இவை விலகல் முறையில் அமைந்த ஆட்டங்களாகும்)

| | | |
|---|---|---|
| யூலை | 2 | ஜேர்மனி - பெல்ஜியம் |
| யூலை | 2 | ஸ்பானியா - சுவிட்சர்லாந்து |
| யூலை | 3 | சவூதி அரேபியா - சுவீடன் |
| யூலை | 3 | ருமேனியா - ஆர்ஜென்ரீனா |
| யூலை | 4 | நெதர்லாந்து - அயர்லாந்து |
| யூலை | 4 | பிரேசில் - ஐ. அமெரிக்கா |
| யூலை | 5 | நைஜீரியா - இத்தாலி |
| யூலை | 5 | மெக்சிக்கோ - பல்கேரியா |


...ட்டப் போட்டியின் முதல் சுற்று முடிவடைந்துவிட்டது. 24 நாடுகளில் 16 நாடுகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற 8 நாடுகள் தம் தாயகத்திற்குத்திரும்பப் போகின்றன கொலம்பியா, கமரூன், ரஷ்யா பொலிவியா தென்கொரியா, கிறீஸ், நோர்வே, மொறொக்கோ ஆகியவையே அந்நாடுகளாகும்.

கொலம்பியா உலகக்கிண்ணப் போட்டியில் கணிசமான தூரம் வரைமுன்னேறும் என எதிர்பார்ப்பு இருந்தபோதும் போட்டிகளில் வெற்றியடைய இயலவில்லை ருமேனியாவுடன் சிறப்பான வெற்றியொன்றைப் பெற்ற போதும்போதியபுள்ளிகளைப் பெற இயலாமற் போய் விட்டது

கமரூன் 90 உலகக்கிண்ணப் பின்னணியில் சிறப்பாக எதிர்பார்க்கப்பட்டாலும் இம்முறை அதியுயர் தரமொன்றினைக் காட்டத் தவறிவிட்டது. கமரூன் ஒரு வெற்றியைத் தானும்பெற்றுக் கொள்ள இயலவில்லை.

பொலிவியாவும் ஒரு வெற்றியைத் தானும் பெறவில்லை சமன் செய்த போட்டி ஒன்றின் மூலம் ஒரே ஒரு புள்ளியுடன் திருப்தியடைய வேண்டியதாயிற்று.

ரஷ்யா குறிப்பிடத்தக்க அணியாக இருந்த போதும்,



ளில் அவர்கள் சோபிப்பதில்லை என்பதற்கிணங்க இம்முறையும் தகுதி பெறத் தவறிவிட்டார்கள். இவர்கள் கமரூனுக்கு எதிராக 6 கோல் போட்டமை இத்தொடரின் அதி கூடிய கோல்களாகும். கிறீஸ் உலகக் கிண்ணத்தரத்தில் பலவீனமான அணியாகும், ஒரு வெற்றியைத் தானும் இவர்களால் பெற்றுக் கொள்ள இயலவில்லை.

இச்சுற்றுப் போட்டியின் மிகக்கடினமான பிரிவு என்று கருதப்பட்டது 'E' பிரிவாகும். இப்பிரிவில் இடம்பெற்ற நோர்வே, இத்தாலி, அயர்லாந்து, மெக்சிக்கோ ஆகிய நான்கு நாடுகளும் தலா 4புள்ளிகளையே பெறமுடிந்தது. ஒவ்வொரு நாடும் ஒரு வெற்றியையும், ஒரு சமம் என்ற நிலையையுமே அடைய முடிந்தது. இந்நிலையில் நோர்வே அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற இயலாமற் போனமை மிகுந்த துரதிஷ்ட வசமானதாகும்.

தென்கொரியா, மொறொக்கோ ஆகியநாடுகள் இரண்டும் அடுத்த சுற்றுக்குத் தகுதி பெறவில்லை என்பது ஆச்சரியமானது தான் கிறீஸ் எதுவித புள்ளிகளையும் பெறாமல் வெளியேறியது போலவேமொறொக்கோவும் வெளியேறுகிறார்கள் ஆனால்மொறொக்கோ அற்புதமானதொரு அணி அவர்கள் அதிர்ஷ்டம் அற்றவர்கள் குறைந்தது இரண்டு ஆட்டங்களாவது வென்றிருக்க வேண்டியவர்கள் அவர்கள் இருந்தும் துக்ககரமாக இரண்டாம் சுற்றுச் சந்தர்ப்பத்தை இழக்கிறார்கள் இவர்களது ஆட்டத்தில் குறிப்பிடத்தக்கது பெல்ஜியத்துக்கெதிராக இவர்கள் ஆடிய பாணியாகும்.

தென் கொரியா அடுத்த சுற்றுக்குத் தகுதிபெறவில்லையென்றாலும்அவர் கள் தம்

(4ஆம் பக்கம்பார்க்க)

# விளையாட்டு அரங்கு

## டியாகோ மரடோனா நாடு திரும்பினார்

டியாகோ மரடோனா உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கு கொள்வதில் இருந்து காலவரையறையற்ற தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். சக்தியை அதிகரிக்கச் செய்யும் மருந்துகளை உட்கொண்டார் என்பதே அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டாகும். உலக உதைபந்தாட்ட அமைப்பான FIFA இத்தடையை விதித்துள்ளது. தனது தாயகம் திரும்பிய மரடோனா மனமுடைந்த நிலையில் கருத்துக் கூறுகையில் தான் என்றுமே போதைவஸ்துக்கள் பாவித்தது கிடையாதென்றும், இச்சம்பவத்தில் தனது கருத்துக்களை எடுத்துக் கூற FIFA சந்தர்ப்பம் தரவில்லை என்றும் அதிருப்திப்பட்டுள்ளார் புவனஸ் அயர்ஸ் விமான நிலையத்தில் மக்களினால் அமோகமாக மரடோனா வரவேற்கப்பட்டார் இவர் உலகப்புகழ் பெற ஆரம்பித்தபின் தொல்லைகள் இவரைப்பின் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன 1991ல் 15 மாத தடையொன்றினை போதைப்பொருள் தொடர்பாக இவர் அனுபவித்தார் சர்ச்சைக்கு இடமற்ற உலகின் முதற்றர வீரன் மரடோனா இவரை நோக்கியே தொடர்ந்தும் கணைகள் செலுத்தப்பட்டுக்கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? எத்துறை சார்ந்த புகழும் பெருமையும் உலகின் குறிப்பிட்ட வலயங்களுக்குள் மட்டும்தான் அடங்க வேண்டும் என்பதும் அதை மீறிச் செல்லும்போது அபகீர்த்தி ஏற்படுத்துவதும் கூட ஒரு பாணியாகவே இப்போது கையாளப்பட்டு வருகின்றது போல் தெரிகிறது மரடோனாவும் இதற்குப் பலியாகிவிட்டாரா என்றொரு வினா பரவலாக எழும்புகின்றது இவரது அதீததிறமை விவேகம் வேகம் நுட்பம் எல்லாமே போதைப் பொருளுடன் மலினமாகத் தொடர்புபடுத்தப்படுவது போலத்தெரிகின்றது இவரில் சில குறைபாடுகள் காணப்பட்டிருக்கலாம் ஆனால் இவரைக் கேவலப்படுத்த முனைவது துர்ப்பாக்கியமாகும் 17 வயதில் ஐரோப்பிய நாடொன்றுடன் விளையாட ஆர்ஜென்டீனாவால் அழைக்கப்பட்ட மரடோனா இந்தளவிற்கு உலகப் புகழ் பெற்றமைக்குக் காரணம் வெறுமனே மரடோனாவிற்கு எதிராக அமைகின்ற சிலகாரணங்களாக இருக்க முடியாது மரடோனாவின் திறமை மறுக்கப்படவும் முடியாது.

## பெரும்பலம்

கின்றன. வீராங்கனைகளும் கூட பல்வேறு துறை விளையாட்டுக்களில் அங்கம் வகிப்பவர்கள். எனவே அவர்களின் கல்விக்கும் குந்தகம் ஏற்படாது செயற்பட வேண்டியிருக்கின்றது. 1993ல் மாவட்ட சாம்பியன்களாக எமது கல்லூரியே வந்தது என்கிறார்.

இம்முறை என்ன விதமாக மாவட்டப் போட்டிகளை எதிர் கொள்ளப் போகிறீர்கள் என்று கேட்டபோது ''வலயம் ஒன்றி்ல் இருந்தும் இரண்டில் இருந்தும் வரும் அணிகள் எனும் போது அங்கு தெரிவு செய்யப்பட்ட திறமையான அணிகள் தான் வரப் போகின்றன. அதனை நன்கு மனதில் வைத்து அதற்கேற்ப கடுமையான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பயிற்சி ஆட்டங்களை ஆடவேண்டும். நாம் எம்மால் இயன்றளவு சிறப்பாகவே மாவட்ட மட்டத்தில் செயற்படத் தீர்மானித்துள்ளோம் எனினும் இப்போதே முடிவுகளைத் தீர்மானித்துவிட இயலாதல்லவா? என்கிறார் பொதுவாக இவருடன் உரையாடிய போது 15 வயதுப் பிரிவு ஆரம்பித்து அங்கிருந்தே பயிற்சியை ஆரம்பித்தால் மிகத் தரம் வாய்ந்த அணிகள் உருவாக இயலும், யாழ்ப்பாணத்தில் வலைபந்தாட்ட ஆற்றலுக்குக் குறைவில்லை ஆனால் அது மெருகூட்டப்பட வேண்டும் என்று கூறினார்.

## உலகப்

முத்திரையைப் பதித்து விட்டே செல்கிறார்கள் அவர்கள் 2 ஆட்டங்கள் சமமென்ற வகையிலும். ஒரு ஆட்டம் தோல்வியென்ற கள் விளையாடிய பாணி உலக விமர்சகர்களால் பாராட்டப்பட்டுள்ளது தெ. கொரியா விளையாட ஜேர்மனி அலமலந்து நின்ற நிலையை இவ்வாட்டத்தில் காணக்கூடி

---

உ

★ ஸப்தஸ்வரா ★

## இசைமன்ற ஆரம்ப கலைவிழா

இடம் : நல்லூர் இளம்கலைஞர் மன்ற கலா மண்டபம்.

காலம் : 03-07-94 ஞாயிறு பிற்பகல் 2. 30 மணி

நிகழ்ச்சிகள்: மங்கள இசை - வயலின் இசை ஸப்தஸ்வரா மாணவர்களின் சங்கீத மேகம்

**ஸப்தஸ்வராவின் இன்னிசை வார்ப்புகள்**

இசை நிகழ்ச்சி ஆகியன இடம் பெறும்:

**அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

க கண்ணதாசன்
நிர்வாகி- ஸப்தஸ்வரா இசைமன்றம்.

(8710)

---

## முக்கிய அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் நிறைவு பெற்று 23 - 01 - 94 அன்று கும்பாபிஷேகம் நிறைவேறிவிட்டது குறித்த இக்கோவிலின் பெயரில் யாரேனும் பொது மக்களிடமிருந்து பணம் வசூலித்தால் அவ்விதமான செயலுக்கோ கொடுக்கல் வாங்கல்களுக்கோ நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகிறோம்.

இங்ஙனம்
கல்வியங்காடு அருள்மிகு
ஸ்ரீ இலங்கைநாயகி மனோன்மணி
அம்பாள் கோயில்

(8708)

---

## நகராட்சிமன்றம், பருத்தித்துறை
## பதில் சுகாதாரத் தொழிலாளர் பதவிக்கான வெற்றிடங்கள்

இந்நகராட்சிமன்றத்தில் மேற்படி பதவிக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பின்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயதெல்லை : 18 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கல்வித் தகைமை : 5 -ம் வகுப்பிற் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வதிவிடத் தகைமை : இந்நகராட்சிமன்றத்தின் நிர்வாக எல்லைக்குள்ளும், அதனை அண்மித்த பகுதிகளிலும் வசிப்பவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மலகூடச் சுத்திகரிப்பு வேலை செய்ய முன்வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் 21.7.1994-ம் திகதி பி.ப. 3. 00 மணிக்கு முன்பு எனக்குக் கிடைக்கததக்கதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 30.06.1994 (சி-9728)

---

## தையற்கலை கண்காட்சி

(தொல்புரம்)

யாழ் தேசிய சர்வோதயத்தினரின் உடுவில் பிரதேச நிலையத்தில் தையல்பயிற்சியினை நிறைவுசெய்து கொண்ட மாணவிகளின் தையல்கலைக் கண்காட்சி அண்மையில் வெகுசிறப்பாக நடைபெற்றது-

மேற்படி கண்காட்சி உடுவில் பிரதேச நிலைய மண்டபத்தில் மாவட்ட இணைப்பாளர் பா. செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற போது உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டார். தமிழர்புனர்வாழ்வுக்கழக சுண்ணாகம் பிரிவு இணைப்பாளர் திரு. சுப்பிரமணியம், சமூக சேவை உத்தியோகஸ்தர் திரு வ. செல்வம் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர். இலவச தையல் பயிற்சியில் பங்குபற்றிய மாணவிகளுக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (41)

## முதலிடம் பெற்றன

(தொல்புரம்)

வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்ட சுகாதார வாரத்தை ஒட்டி நடைபெற்ற கவிதை, கட்டுரை, பேச்சு, ஓவியப் போட்டிகளில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டவர்களின் விபரம் வருமாறு:- ஓவியம் செல்வன் த. லக்மன் (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி), பேச்சு செல்வன் செ. பஞ்சாட்சரம்(சண்டிலிப்பாய் மகாவித்தியாலயம்),கட்டுரை செல்வன் கா. சரிகரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி) கவிதை இ. கருணா (மானிப்பாய் உடுவில் வீதி, விநாயகர் குடியிருப்பு).

மேலும் இடம் பெயர்ந்தோர் குடியிருப்புக்களின் தர மதிப்பீட்டுக்கான போட்டிகளில் முதலாம் இடத்தினை நவாலி புலவர் முகாமும், 2 ஆம் இடங்களை மானிப்பாய் அட்டகிரி II முகாமும், பிரான்பற்று நிச்சாமம் விக்கினேஸ்வரா முகாமும் பெற்றுக் கொண்டன. அத்தோடு சனசமூக நிலையங்களுக்கிடையேயான நாடகப் போட்டியில் கட்டுடை மேஜர் சுபாஸ் சனசமூக நிலையம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (41)

---

## தென் ஆபிரிக்கா போலவே இங்கும் இனவாதம் உள்ளது

### எஸ்.நடேசன் தெரிவிப்பு

இனவாதத்தின் உச்சக்கட்டத்தில் ஆட்சி செய்த தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் காணப்பட்ட அதே அளவுக்கு இலங்கையிலும் இனவாதம் கடைப்பிடிக்கப்பட்டு வருவதாக பிரபல தொழிற்சங்கவாதியான எஸ். நடேசன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் அவர் கையளித்த மகஜர் ஒன்றில் மேலும் குறிப்பிடுகையில், மலைநாட்டு தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்த 1948-ம் ஆண்டின் 17-ம் இலக்க சட்டவிதியின் மூலம் இலங்கையில் இரண்டு வகை பிரசைகள் ஏற்படுத்தப்பட்டனர். இச்சட்டத்தினால் ஏற்பட்ட விளைவை இதுவரை எந்தச் சட்டமும் மீளப்பெறவில்லை.

இந்தியர் தொடர்புடைய தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் இன்று வரை தீர்க்கப்படவில்லை, எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தல்களில் கூட நான்கு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தமது வாக்குகளை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவர்களது விருப்பு வெறுப்புகள் புறக்கணிக்கப்படும் நிலை உள்ளது. மலையக மக்களில் பதினான்கு லட்சம் பேர் வாழும் போதும் ஆறு லட்சம் பேரே வாக்களிக்க உரிமை பெற்றுள்ளதாகவும், மேலதிகமாக இருபது லட்சத்திற்கு அதிகமான மக்கள் பதிவு செய்யப்பட்டவர்களாக இருக்கும் போதும் வாக்குப் பதிவில் ஏற்பட்ட குளறுபடிகளினால் வாக்களிக்க முடியாத நிலை இருப்பதாகவும் அம்மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

---

## நெஞ்சை நெருடும் இரண்டாண்டின் நினைவலைகள்



சுன்றவர் மடியில்:
05 - 04 - 1975

ஈழவர் மனங்களில்:
03 - 07 - 1992

## லெப்டினனட் ராஜேஸ்

(கந்தையா சிறி சுதாகரன் / செல்வன்)
[திருமலை]

திக்கெட்டும் புகழ்பரப்பும் புலிப்படையின்
தீந்தமிழர் பெருந்தலைவன் அரவணைப்பில்
எக்கலையும் பாசறையில் கற்ற பின்பு
எல்லையிலோ எதிரிகளைக் காத்து நின்றான்.

தெங்கு பனை செந்நெல்லும் வாழைமாவும்
செழித்திருக்கும் மண்டலாய் சொந்தமண்ணை - எதிரி
வஞ்சனையால் ஆளுமைக்காய் வந்தவேளை - அவனை
வழிமறித்துக் குலப்பெருமை காத்து மாண்டாய்.

3 - 7 - 94 இன்று எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஒரு ஆட்டம் தோல்வியென்ற நிலையிலும் வெளியேறுகிறா ர்கள் ஆனால் அவர்கள தோ ல்விகண்ட ஆட்டம் ஜேர்மனி யுடனனாதாகும்இடைவேளை யின் முன்னரே 3 கோல் போ ட்ட ஜேர்மனிக்கெதிராக இடைவேளையின் பின் இர ண்டு கோல்கள் போட்டது மட்டுமல்ல, ஜேர்மனி அணி யை 45 நிமிடங்கள் திக்கு முக்காட வைத்தவர்கள் தெ. கொரிய அணியினர் அவர் இவ்வாட்டத்தில் காணக்கூடி யதாக இருந்தது வென்றிரு க்க வேண்டிய ஆட்டமொ ன்று துக்ககரமாக தெ. கொரி யாவிற்குத் தோல்வியாக அமைந்தது.

தென். கொரியா, மொ றொக்கோ அணிகள் இரண் டும் தகுதிபெறா விட்டாலும் கூட ஆசிய, ஆபிரிக்க மக்க ளுக்கு பெருமையும், கௌர வமும் சேர்த்து விட்டேவெளி யேறுகிறார்கள்.


எமது மண்ணில் நற்பெயர் பெற்றது




றோயல் றோஸ்
ரால்கம்பவுடர்

- நறுமணமிக்கது
- சுகாதாரமிக்கது
- புத்துணர்ச்சியானது
- அணைவராலும் விரும்பதக்கது
- விலை மலிவானது

தீபா றோஸ்
ரால்கம்பவுடர்




அழகிய கொள்கலன்களில் அற்புத
தயாரிப்பாக விற்பனையிலுள்ளது

றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை வடமேற்கு,
ஆனைக்கோட்டை.




புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய

## வருடாந்த
## உயர் திருவிழா நாள் இன்று

**அந்தோனியாரே! அபயம், காத்தருள்வாய்!**

ராகம்: பெஹாக் தாளம்: ஆதி

**பல்லவி**

மனமுருகித் தொழுதோம் அந்தோனியாரே!
தினமும் உன் சேவடித் திருவருளே அபயம்

**அனுபல்லவி**

கனவிலும் நனவிலும் கவின் திருப்பூங்குடி
வன தாலத் தலம் வளர் வளமார் அந்தோனியாரே

**சரணம்**

புதுமையருள் பலவும் புரிந்திடுவோய் உந்தன்
மதுமலர் பதமே மகிதலத்தில் துணையே
எது இடர் வந்தாலும் எமைக் காப்பவர் நீயே
அதி உத்தமத் தவத்தின் அழகு அந்தோனியாரே

யாழ்ப்பாணம்: -கவிமாமணி ந. வீரமணி ஐயர்

விளம்பர அன்பளிப்பு

**மில்க்வைற்**
**சவர்க்காரத் தொழிலகம்**
யாழ்ப்பாணம்.

**ஜி. எஸ். லிங்கநாதன் அன்கோ**
**(புடவை மாளிகை)**
13-14, பெரியகடை - யாழ்ப்பாணம்.

**பாலவிநாயகர் றேடர்ஸ்**
கண்டி வீதி, கிளிநொச்சி.

**திரு. சபா - சிவநேசன்**
தொழிலதிபர்
புங்குடுதீவு- திருநெல்வேலி.

**சிவநாதன்ஸ்**
**(புடவை மாளிகை)**
நவீன சந்தை - யாழ்ப்பாணம்.

**திரு. அ. பொ. மகேந்திரன்**
தொழிலதிபர்
80, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

**நித்தியா நகை மாளிகை**
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**திரு. செ. தில்லைநாதன் J. P.**
புங்குடுதீவு - 12

**சிங்கப்பூர் உணவகம்**
42, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிய கல்யாணி**
**நகைத் தொழில் அகம்**
320/14, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.


(8694)

யும் அன்புடன் அழைக்கின்றோம்.

-- குடும்பத்தினர்.

மாமுனை, செம்பியன்பற்று. (8672)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை இயல்வாணன் (கஸ்றோ)**
**(சோ. சுந்தரம் கமலநாதன்)**
வாரிவளவு காரைநகர்

**மண்ணில்:** **28- 12- 1974**
**மண்ணிற்காக:** **3- 07- 1992**

(கட்டைக்காட்டில் இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்தார்)

பணி முடித்தொரு புலி படுத்தனை
பதை பதைக்குது இதை நினைத்திட
இனம் செழித்திட நினை அழித்தனை
இயல்வாணனே இயல் எமக்கிது
ஆண்டு இரண்டுகள் தாண்டும் நாளிது
ஆளும் மனதிலே வாழும் குருளையே
மீண்டும் உன்னைநாம் காண்டிடோமடா
மிக விரைவில் உன் கனவு நிறைவுறும்

40, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்.
(சி-9729)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

### சிந்தனைக்கு..

அறிவிற் சிறந்த மனிதனும் விடை கூற இயலாத கேள்வியை, ஒரு முட்டாள் கூட கேட்டு விட முடியும்.

- ஜேக்கப் ஆபட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 03-07-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## அரசியல் வாதிகளின் அர்த்தமற்ற பேச்சுகள்

"கெரில்லா யுத்தங்கள் நடைபெற்ற நாடுகளில் எல்லாம் இன்று பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு வருகையில் பேச்சுவார்த்தை மூலம் வடக்கு கிழக்குப் பிரச்சினையை ஏன் தீர்க்க முடியாது." இது, காமினி திசாநாயக்கா மாத்தறையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் எழுப்பிய கேள்வியாகும்.

இன்றைய சர்வதேச அரசியல் சூழ்நிலையை மனதிற் கொண்டு எழுப்பப்பட்டுள்ள இக்கேள்வியானது, பொருத்தப்பாடானதும் நியாயமானதும் தான். ஏனெனில். இலங்கைத் தமிழ் மக்களுக்கும் - சிறிலங்கா அரசிற்கும் இடையில் பிரச்சினைகள் எழுவதற்கு முன்னரே எழுந்த பல பிரச்சினைகளும், சிக்கலான பிரச்சினைகளும் கூட இன்று தீர்வை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பது உண்மைதான்.

இந்த வகையில், எரித்திரியா. தென்னாபிரிக்காப் பிரச்சினைகள் ஒரு கட்டத்தை எட்டிவிட்டன. பாலஸ்தீன விடுதலைப் போராட்டம், மக்கள் விரும்பிய தீர்வை முழுமையாகக் கொண்டு வரவில்லை ஆயினும், பேச்சுவார்த்தை மூலம் சில படிகள் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதாகவே அரசியல் அவதானிகள் கருதும் நிலையே உள்ளது.

இந்நிலையில், இலங்கை இனப்பிரச்சினை காலவரையறையின்றி நீளுவதும், பேச்சுவார்த்தை மூலம் தீர்வு ஒன்றை நோக்கிச் செல்ல முடியாத ஒரு நிலையிலும் இருப்பதும் பற்றிக் கேள்வி எழுப்புவதில் அர்த்தம் உண்டு. ஆனால், இக்கேள்வியை மக்களைப் பார்த்து அரசியல்வாதியான காமினி திசாநாயக்கா எழுப்புவதற்கு எந்தளவுக்கு அருகதை உண்டு என்பதே முக்கியமான வினாவாகும்.

# விடுதலைப் போராட்டச் சக்கரத்தை வேகமாக நகர்த்திச் செல்லும் கரும்புலிகள்

முதலாவது கரும்புலி களத்தில் இறங்கிய யூலை 5ஆம் திகதியை கரும்புலிகள் நாளாக புலிகள் இயக்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

கரும்புலி வீரர்களின் அதி உயர் தியாகத்தை-வீரத்தை-கௌரவிக்கும் ஒரு தினமாகவும், அந்த மறத்தமிழ் வீரர்களின் ஆச்சரியமூட்டும் ஆன்ம உறுதியை - வல்லமையை - மக்களுக்கு உணர்த்தும் ஒரு நாளாகவும் கரும்புலிகள் நாள் கொண்டாடப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தேவை கருதி காலத்திற்குக் காலம், தலைவர் பிரபாகரன் அவர்கள் புதிய புதிய போருபாயங்களை வகுத்து - நடைமுறைப்படுத்தி விடுதலைப் போராட்டத்தை வளர்த்து வருகின்றார். அத்தகைய போருபாயங்களில் ஒன்றுதான் கரும்புலித் தாக்குதல் முறையாகும்.

1987 ஆம் ஆண்டு யூலை 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள படை முகாம் மீது முதன்முதலில் கரும்புலித் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது.

அன்றைய காலகட்டத்தில் ஓர் இராணுவ நெருக்கடிக்குள் சிக்கியிருந்த எமது விடுதலைப் போராட்டத்திற்கு, இந்த கரும்புலித் தாக்குதல் ஒரு திருப்புமுனையைக் கொடுத்ததுடன், புதியதொரு உத்வேகத்தையும் வழங்கியது. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கரும்புலித் தாக்குதலை - வெடிமருந்து வண்டியை ஓட்டிச் சென்று எதிரி முகாமினுள் மோதி, தன்னுடன் எதிரி முகாமையும் தகர்த்தெறிந்து -முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் ஒரு மாபெரும் சாதனையை நிகழ்த்தினார். அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுவிட்டன.

ஒவ்வொரு கரும்புலித் தாக்குதலும் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னோக்கி உந்தித் தள்ளி, வெற்றியின் பாதையில் குறுக்கே நிற்கும் தடைக்கற்களை தகர்த்தெறிகின்றது. அதாவது தமிழீழ விடுதலைப் போராட்ட சக்கரத்தை வேகமாக நகர்த்தப் பேருதவியாக இருக்கும் புலிகளின் ஒப்புவமை அற்ற ஒரு போர்க் கருவிதான் கரும்புலிகள். இது போராட்ட விரோத சக்திகளை அழித்து, எதிரிப்படைகளை சிதறடித்து, இறுதி வெற்றியை எளிதாக்கிக் கொடுக்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கரும்புலித் தாக்குதலின் தேவை பற்றிய எண்ணம், ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்திலேயே தலைவரிடம் இருந்தது.

குறைந்த உயிரிழப்புக்களுடன் பெரிய வெற்றிகளை அடைய வேண்டிய அவசியம் எமது போராட்டத்திற்கு உண்டு.

சிங்கள இனத்தை போலல்லாது நாம் எண்ணிக்கையில் மிகவும் குறைந்த ஓர் இனம். அது போலவே எதிரி இராணுவத்துடன் ஒப்பிடும் போது, குறைந்தளவு போராளிகளையும் சிறியளவில் போர்க்கருவிகளையும் கொண்டுள்ள ஒரு விடுதலை இயக்கம்.

எனவே போராளிகள் மத்தியில் ஏற்படக் கூடிய உயிரிழப்புக்களை இயன்றளவு குறைத்தும், அதேவேளை பாரிய வெற்றிகளையும் தேடிக்கொள்ள வேண்டியதேவை எமது போராட்டத்திற்கு உள்ளது. அப்படி நிகழ்ந்தால் தான் நாம் இறுதி வெற்றியை-தமிழீழத்தின் பிறப்பைக் காணமுடியும்.

கரும்புலித் தாக்குதல்முறை ஈழத்தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த வரலாற்றுத் தேவையைநிறைவேற்றி வைக்கக் கூடியது.

ஒவ்வொரு கரும்புலிகளும் வெடிமருந்தை சுமந்துகொண்டு அணுகுண்டை விட அதிகளவு ஆற்றல் வாய்ந்த ஆன்ம உறுதியுடன் எதிரி இலக்கு மீது பாய்ந்து, தன்னுடன் சேர்த்து எதிரிகளையும் அழித்து மாபெரும் தியாகம் புரிகின்றனர்.

பெருந்தொகைச் செலவிலான நவீன போராயுதங்களுடன் அல்லது பெரும் எண்ணிக்கையிலான போராளிகளது இழப்புடன் செய்து முடிக்கப்பட வேண்டிய ஓர் இராணுவ வெற்றியை ஒரு கரும்புலி அல்லது ஓரிரு கரும்புலிகள் செய்து முடிக்கின்றனர். அதேவேளை அணுக முடியாத இலக்குகள் என்ற ஒரு விடயம் கரும்புலிகளது அகராதியில் இல்லை, அது போலவே கரும்புலித் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்ற நம்பிக்கையும் எதிரிகளின் கூடாரத்தில் இருக்க முடியாது.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு பெரும் பலமாக கரும்புலிகள் அணி மாறிவிட்டது.

இது தமிழீழத்தின் பிறப்பிற்கு மேலும் மேலும் உறுதியும் வேகமும் சேர்க்கின்றது.

நன்றி: விடுதலைப்புலிகள்
ஆனி - 1993

## ரஷ்ய-இந்திய ஒத்துழைப்பு வேறு எவருக்கும் எதிரல்ல

- நரசிம்மராவ்

(மாஸ்கோ)

இந்தியாவிற்கும், ரஷ்யாவுக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பு மூன்றாவது நாடு எதற்கும் எதிரானது அல்ல என்று இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவ் குறிப்பிட்டார் பன்நாட்டு அரசுகளின் உரிமைகளைப் பாதுகாக்க கோரும் ஒப்பந்தத்தில் ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சினும், இந்திய பிரதமர் பி. வி. நரசிம்மராவும் அண்மையில் கையெழுத்திட்டுள்ளனர்- அதன்பின் நரசிம்மராவ் செய்தியாளர்களிடம் பேசினார்.

இருதரப்பு உறவுகளுக்கு வலுச் சேர்க்கும் மற்றுமொரு ஒப்பந்தத்திலும் இந்திய- ரஷ்யத் தலைவர்கள் ஒப்பமிட்டனர்- இராணுவ ஒத்துழைப்பு, பொருளாதார ஒத்துழைப்பு, விண்வெளியில் ஆய்வு, அறிவியல் தொழில்நுட்பம், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு, தர நிர்ணயம் போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதாக இவ் ஒப்பந்தம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## உள்நாட்டு விவகாரங்களில் பாக். தலையிடுகின்றது

- ஆப்கான் குற்றச்சாட்டு

(காபூல்)

பாகிஸ்தான் அரசு தமது நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட்டு வருவதாக ஆப்கானிஸ்தான் அரசு குற்றம் சாட்டியுள்ளது. ஆப்கானிஸ்தான் பற்றி பாகிஸ்தானின் வெளிவிவகார அமைச்சர் சர்தார் ஆசிப் அலிமுகமர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் கடந்த 28 ஆம் திகதிக்குப் பின்னர் ஆப்கானில் நடைபெறும் சம்பவங்கள் அரச அங்கீகாரம் அற்றவை எனத் தெளிவாக குறிப்பிட்டிருந்தார். இவ் அறிக்கை தொடர்பாகவே ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை இஸ்லாமாபாத் மற்றும்ஜலலாபாத்ஒப்பந்தங்களை மீறி மேலும் ஆறு மாதங்களுக்கு பதவி நீடிப்பு செய்துள்ள அதிபர் ரபானியின் செயலை பாகிஸ்தான் கண்டித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## முதல்வருக்கு அழைப்பாணை அனுப்ப ஜெயின் மறுப்பு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி கொல்லப்பட்டதன் பின்னணி பற்றி விசாரணை நடத்தி வரும் நீதிபதி ஜெயின் தலைமையிலான விசாரணைக் குழு தமிழகமுதல்வர் ஜெயலலிதாவிற்கும், முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி மார்க்கிரேட் ஆல்வாவிற்கும் அழைப்பாணை அனுப்ப மறுத்துவிட்டுள்ளது.

இது குறித்து இவ் விசாரணைக் குழு மேலும் தெரிவிக்கையில் இவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டு எதுவும் இல்லை எனக் குறிப்பிட்டது.

## தென் மாகாண சபைக் கூட்டத்தில் கடும் வாக்குவாதம்; குழப்பம்

சபை ஒத்திவைப்பு

தென் மாகாண சபையின் கூட்டம் கடந்த புதன்கிழமை ஆரம்பமான போது ஆளும்

மகிந்த யாப்பா அபயக்கோன் தலைமையில் கூட்டம் நடந்து கொண்டிருந்த

பாராத விதமாக தண்ணீர் பிளாஸ்குகள் பறந்தன. பின்னர் பெயர் பலகைகளும் வீசப்

## பொலிஸ்ராணுவ படைகளில் சிறுபான்மையினருக்கு இடம்

உள்துறை அமைச்சர் உறுதிமொழி

அரசியல்வாதிகள் எப்பொழுது எதைப் பேசுவார்கள், எப்படிப் பேசுவார்கள் என்பது எதிர்வு கூற முடியாததுதான். சிலவேளைகளில் அவர்களின் பேச்சு வேடிக்கையானதாகவும், பல சமயம் மக்களை முட்டாள்கள் ஆக்குவதாகவும் இருப்பதுண்டு.

இந்த வகையிலேயே காமினி திசாநாயக்காவின் இப்பேச்சையும் கொள்ள வேண்டியுள்ளது. இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஏன் தீர்வு காண முடியாது என்ற அவரது கேள்வியானது இனப்பிரச்சினைத் தீர்விற்கு மக்கள் ஏன் முட்டுக்கட்டை போட வேண்டும் என்பது போல் உள்ளது. இது இனப்பிரச்சினைத் தீர்விற்கு முட்டுக்கட்டையாகவுள்ள அரசியல்வாதிகள் மக்கள் மீது பழியைச் சுமத்திவிட்டு தப்பித்துக் கொள்வதற்கான வழிமுறையாகும்.

உண்மையிலேயே இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியற் தீர்வு காண்பதானால் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியவர்கள் அரசியல்வாதிகளே, ஆனால், சிறிலங்கா ஜனாதிபதியோ அன்றி அவருக்கு பக்கபலமாக நிற்கும் காமினி திசாநாயக்காவோ பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிக்கவில்லை என்பதே யதார்த்த நிலை அரசியலாகும்.

பல நாடுகளில் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினை தீர்க்கப்பட்டதாக காமினி கூறுகின்றார். அவை எச்சூழ்நிலையில் இடம்பெற்றன என்பதையும் அவர் தெரிவித்திருக்கலாம். அதிலும், குறிப்பாக நிபந்தனைகள் அற்ற பேச்சுவார்த்தைகள் மூலமே பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது என்பதை காமினி மறந்ததேன்?

இந்நிலையில், இலங்கையிலும் அரசியல் ரீதியாகப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால், முதலில் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் உளப்பூர்வமாக விரும்ப வேண்டும். நிபந்தனைகள் அற்ற பேச்சுகள் நடத்தப்பட வேண்டும். தமிழரின் நியாயபூர்வமான உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இதை விடுத்து மக்களை மடையர்களாக்கும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபடுவதால் பயன் ஏதும் ஏற்பட்டு விடப் போவதில்லை. என்றோ ஒருநாள் அதற்கான பலனை அடைந்தே ஆக வேண்டி வரும்.

ஆரம்பமான போது ஆளும் கட்சிமற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதை தொடர்ந்து குழப்பத்தில் முடிவடைந்தது. அமைதியை நிலைநாட்டும் நோக்கில் சபை மண்டபத்தினுள் பொலிசார் பிரவேசிக்கும் நிலையும் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

நடந்து கொண்டிருந்த வேளையில் ஆளும் கட்சியின் அமைச்சர் ஒருவருக்கும் எதிர்க்கட்சியான ஐ.தே.க வின் உறுப்பினர் ஒருவருக்கும் இடையே கடும் வாக்குவாதம் மூண்டது சரமாரியான சொல்லம்புகள் இரு தரப்பிலும் பரஸ்பரம் பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தன.

இந்நிலையில் சற்றும் எதிர்னர் பெயர் பலகைகளும் வீசப்பட்டன. சபை நடவடிக்கைகளைப் பார்வையிட வந்திருந்த பத்திரிகையாளர்களை நோக்கியும் பெயர் பலகைகள் சென்றன. பத்திரிகையாளர் ஒருவரின் கையில் காயம் ஏற்பட்டது.

பின்னர் கூட்டம் எதிர்வரும் 13ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## தமிழ் ஆசிரியர் மாநாடு கோலாலம்பூரில் நடந்தது

தகவல் யுகத்தில் தமிழ் கற்றலும் கற்பித்தலும் என்னும் கருப்பொருளில் மலேசியாவில் அண்மையில் இரண்டாவது உலகத் தமிழ் ஆசிரியர் மாநாடு நடைபெற்றது இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, அமெரிக்கா, மொறிசியஸ், ரியூனியன்போன்ற நாடுகளிலிருந்துசுமார் ஐந்நூறு தமிழாசிரியர்கள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மலேசியக் கல்வி அமைச்சர் டத்தோ அமரர் டாக்டர் சுலைமான் பின் டாவுட்டின் திறப்புரையுடன் ஆரம்பமான இம் மாநாடு தொடர்ந்து நான்கு நாட்கள் நீடித்தது. தமிழ் மொழியை ஆரம்ப பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்கள் உட்பட பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர்கள் பலரும் இம் மாநாட்டில் பங்குபற்றினர். இம் மாநாட்டின் பொது அமர்வில்11கட்டுரைகளும் இணை அமர்வில் 24 கட்டுரைகளும் படிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## 27 ஆண்டுகளின் பின் அரபாத் காஸா விஜயம்

### கறுப்புக் கொடி காட்டி வரவேற்பு

(ஜெருசலேம்)

27 ஆண்டுகள் நாடு கடந்து வாழ்ந்த பின்னர் முதல் தடவையாக பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் நாடு திரும்பியுள்ளார்.

காஸாப்பகுதிக்கு சென்றுள்ள யாசிர் அரபாத் அமைக்க இருக்கும் நிர்வாகத்தை ஒரு அரசாங்கமாக இஸ்ரேல் அங்கீகரிக்கும் என்று ஜெருசலேமிலிருக்கும் இஸ்ரேலிய அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காஸாப்பகுதிக்கு யாசிர் அரபாத் சென்றபோது பாலத்தீனியர்கள் கறுப்புக் கொடிகளைக் காட்டி ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், இஸ்ரேலிய சிறைகளில் இருக்கும் பாலத்தீனியர் விடுவிக்கப்படாத நிலையில் அரபாத்தின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும் தெரியவந்துள்ளது.

எனினும் பாலத்தீனிய பொலிஸ்படையை அமைப்பதற்கு யாசிர் அரபாத்திற்கு உதவ உலகவங்கிமுன் வந்துள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-07-03**

**ஞாயிறு இரவு**

08.01 கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி

''வெடிகுண்டின் புத்திரர்கள்''

08.30-செய்திகள்

08.40-தொடர் நாடகம் -'இலங்கை மண்30-ம் அங்கம்''

**1994-07 04**

**திங்கள் காலை**

07.02-மாவீரவணக்கம்

07.15-மணியாரம்

07.30-செய்திகள்

07.35-பத்திரிகைச் செய்திகள்

07-40-தாயகப்பாடல்கள்

### உள்துறை அமைச்சர் உறுதிமொழி

பொலிஸ் மற்றும் துணை இராணுவ படைகளில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்களுக்கு உரிய இட ஒதுக்கீட்டைப் பெற்றுத்தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் தம்மை சந்தித்துப் பேசிய நீதிபதி சர்தார் அலிகானிடம் உள்துறை அமைச்சர் இதற்கான உறுதிமொழியை வழங்கினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், மாவட்ட அளவிலான பொலிஸ் சேவைக்கான ஆட்சேர்ப்புக் கமிட்டியில் குறைந்தபட்சம் ஒருவராவது சிறுபான்மை இனப் பிரதிநிதியாக நிரந்தரமாக நியமிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுவதாகவும், இதே போன்ற நடவடிக்கை துணை இராணுவப் படைகளிலும் கடைப்பிடிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

### மொரிட்டோனியா விமான விபத்தில்

## 25 குழந்தைகள் உட்பட 94 பேர் பலியானார்கள்

வடக்கு மொரிட்டோனியாவில், ஏயார் மொரிட்டோனியா விமானமொன்று, கீர்சிரிய விமானநிலையத்தில் தரை இறங்கும் போது நேரிட்டவிபத்தில் 25குழந்தைகள் உட்பட 94 பேர் உயிரிழந்துள்ளனர்.

விமானம் தரையிறங்கும் போது வீசிய புயல்காற்றுதான் விபத்திற்கு காரணம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## தமிழ் மொழி மூல ஆசிரியர் 1000 பேர் நியமனமாவர்

(கொழும்பு)

தமிழ் மொழி மூலம்விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைப் போதிப்பதற்காக ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். கல்விச் சேவைகள் சபை இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் இதற்கான தெரிவுகள் மேற்கொள்ளப் படவுள்ளது. இப்பதவிக்காக விண்ணப்பிக்க விரும்புவோர் இம் மாதம் 21ம் திகதிக்கு முன்பாக தமது விண்ணப்பங்களை பரீட்சை திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது இதற்கான மேலதிக விபரங்கள் கடந்த பத்தாம்திகதி அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

## பிற்போடப்பட்டது

வலய மட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று 3-ம் திகதி நடைபெறவிருந்த சர்வதேச சூழல் பாதுகாப்புத்தினம் பிற்போடப்பட்டுள்ளது என்பதனையும் இதுபற்றிபின்னர் அறிவிக்கப்படும் எனவும் வலயம் 1 கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பத்து மாவட்டங்களில் இ.தொ.கா. வேட்பாளர்

(கொழும்பு)

பத்து மாவட்டங்களில் இ.தொ.கா. வேட்பாளர் போட்டியிடவுள்ளனர். பதுளை, மாத்தளை, கொழும்பு, நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி, கேகாலை, கம்பகா, மாத்தறை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்த இ.தொ.கா. முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின்படி பின்வருவோர் வேட்பாளர்களாக நிறுத்தப்படவுள்ளதாக தெரியவருகின்றது:

நுவரெலியாவில், இ தொ. கா. பொதுச் செயலாளர் தொண்டமான் ஆறுமுகம், மத்திய மாகாணசபை அமைச்சர் எஸ். சதாசிவம், நூரளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் என் சிவலிங்கம்.

கண்டியில், மத்திய மாகாணசபை உறுப்பினரும், இ. தொ. கா. உபதலைவருமான செ. ராஜரத்தினம்,

மாத்தளையில் மாத்தளை மாநகரசபை துணைமேயர் சிவலிங்கம்,

பதுளையில், ஊவா மாகாணசபை பிரதித் தலைவர் சுப்பையா. பதுளை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சென்னன்,

கொழும்பில், அமைச்ச. பி. பி. தேவராஜ், மேல்மாகாண சபை உறுப்பினர் ஆர்ா யோகராஜன், கம்பகாவில் திவ்வியராஜன் ஆகியோரும் போட்டியிடுவர்.

ஏனைய மாவட்டங்களுக்கான வேட்பாளர் தெரிவு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

## காமினி பொன்சேகா தேர்தலில் போட்டியிடார்

முன்னாள் பிரதிச்சபாநாயகரும், மாத்தறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், சிங்கள சினிமா நடிகருமான காமினி பொன்சேகா எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சியின் கீழும் போட்டியிட மாட்டாரென அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தெரிய வருகிறது.

ஐ. தே. கவின் வேட்பாளராக போட்டியிட விரும்பாவிட்டால் பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட வரும்படி விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்த அவர் இத்தகைய செயற்பாடு கட்சி மாறிவிட்டதாக மக்கள் கருதுவதற்கு இடமளிக்கும் எனவும், இத்தகைய சர்ச்சைகளிலிருந்து விடுபடவே தாம் விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

**பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு**

## கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து எட்டுப் பேர் தெரிவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுமக்கள் முன்னணி வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்கு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி சமர்ப்பித்த 12 வேட்பாளர்களின் பெயர்களில் 8 பேரின் பெயர்களே வேட்பாளர் தெரிவின் போது அங்கீகரிக்கப்பட்டதாக தெரியவருகின்றது.

போட்டியிடுவோர்களில் ராஜா கொள்ளுரே, பி. என். துடாவை, சந்திரசேன கஜவீர, ஈ. ஏ. சமரசிங்க ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்

## ஊழியர், வாகன விபரம் கோரப்படுகின்றது

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆட்களைத்திரட்டுவதற்கும், வாகனங்களைப் பயன்படுத்துவதற்குமாக, சகல ...

வாகனங்களின் விபரங்களையும் தேர்தல் ஆணையாளர் கோரியுள்ளார்.

இம்மாதம் 7-ந் திகதிக்கு முன்னர் இவ் விபரங்களை ...

## ஐ.தே.க எடுக்கும் நடவடிக்கையிலேயே எனது எதிர்காலம் இருக்கிறது

### செல்லச்சாமி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐ. தே. க எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்தே எனது எதிர்காலச் செயற்பாடுகள் இருக்கும் என கைத்தொழில இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கடந்த வியாழனன்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நான் ஐ. தே. கவிடம் கடந்த 25 ஆண்டுகளாக தொடர்பு வைத்துள்ளேன். இ. தொ. கா வேட்பாளராக 1982 ல் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினேன். அதன் பின் 1988 இல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களிலும், ஐ. தே. க பட்டியலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டி. மாகாண அமைச்சரானேன் பின்1989ல் பாராளுமன்றத் தேர்தலில் இ தொ. கா வேட்பாளராக யானைச் சின்னத்திலே போட்டியிட்டு வெற்றிபெற்று இன்றும் ஐ தே. க அமைச்சரவையிலேயே அமைச்சராக வுள்ளேன்.

நிலைமை இப்படி இருக்க, நான் ஐ தே. க சார்பில் போட்டியிடுவதற்காக கோரிக்கைகளை முன் வைத்துள்ளேன்.

ஐ தே கவின்நடவடிக்கைகளைப் பொறுத்தே எனது எதிர்கால நடவடிக்கைகள் அமையும் என அவர் அவ்வறிக்கையில் மேலும் கூறியுள்ளார்.

## இனப்பிரச்சினையை தீர்க்க சந்திரிகா நடவடிக்கை

பொது ஜன ஐக்கிய முன்னணியுடனான, முஸ்லிம் காங்கிரசின் தேர்தல் உடன்படிக்கையின்போது வடபகுதி முஸ்லிம்கள் பிரச்சினையும், இனப்பிரச்சினைத் தீர்வும் முஸ்லிம் காங்கிரசினால் வலியுறுத்தப்பட்டதாக தெரிய வருகிறது.

பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் உடன்படிக்கையை தயாரித்த சந்திரிகா குமாரணதுங்கா இக் கோரிக்கைகளுக்கு உடன்பட்டதாகவும் அறிய முடிகின்றது.

பாராளுமன்றத் தேர்தல் மட்டுமல்லாது ஜனாதிபதித் தேர்தலிலும் முஸ்லிம் காங்கிரஸ், பொது ஜன ஐக்கிய முன்னணியை ஆதரிக்கும் என அதன் தலைவர் அஷ்ரப் கூறியுள்ளார்.

**பூநகரி**

துச்செல்லப்பட்டுவழங்கப்படும்

பின்னர் நாளை காலை 9.00 மணிக்கு இந்த ஆறு மாவீரர்களது உருவப் படங்களும் அவரவர் வீடுகளிலிருந்தும், கரும்புலி கப்டன் சீராளனின் உருவப்படம் மன்னார்த் தொடர்பகத்திலிருந்தும். கரும்புலிகள் கப்டன் மதிநிலவன், கப்டன் கரிகாலன் ஆகிய இருவரின் உருவப் படங்களும் திருமலைத் தொடர்பகத்திலிருந்தும், கரும்புலிகள் மேஜர் கலையழகன், லெப். ஜீவரஞ்சன், மேஜர் தொண்டமான், கப்டன் சிவலோகன் ஆகிய நால்வரின் உருவப்படங்களும் மட்டு-அம்பாறைத் தொடர்பகத்திலிருந்தும் அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் பதின்மூன்று கரும்புலிகளினது உருவப்படங்களும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அஞ்சலிக் கூட்டமும் நடைபெறும் தொடர்ந்து பூரண அணிவகுப்பு மரியாதைகளுடன் ஊர்திபவனியாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு கப்டன் மதிநிலவன், கப்டன் செந்தமிழ்நம்பி, மேஜர் கலையழகன், கப்டன் ஐயனார், லெப். வீரமணி, லெப். செங்கண்ணன், லெப். ஜீவரஞ்சன், ...

## நம்பிக்கையில்லாதீர்மானம் நிராகரிக்கப்பட்டது

(கொழும்பு)

வடமேல் மாகாண சபை முதலமைச்சருக்கு எதிராக அம் மாகாணசபையின் இரு அமைச்சர்களால் கொண்டு வரப்படவிருந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மாகாண சபை நிர்வாகத்தினரால் நிராகரிக்கப்பட்டது.

இவ் விடயம் மாகாண சபை நடைமுறைக்கு ஒவ்வாதது எனக் கூறப்பட்டே நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது

வடமேல் மாகாண சபை முதலமைச்சர் ஜீ எம் பிரேமச்சந்திராவுக்கு எதிராக மாகாணசபையின் மூன்ல அமைச்சர்களால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா தீர்மானமே இவ்வாறு நிராகரிக்கப்பட்டது.

**பொ. ஐ. மு- முஸ்லிம் காங்கிரஸ்**

## கூட்டு அறிவிப்பின் பின் முஸ்லிம் வீடுகளுக்கு தீ

முஸ்லிம் காங்கிரஸ் பொது மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் உடன்பாடுசெய்துகொண்டதாக அறிவிக்கப்பட்ட சில மணி நேரத்தில் கற்பிட்டி பகுதியில் அமைந்திருந்த முஸ்லிம்கள் வீடுகள் தீப்பற்றிக் கொண்டதாக அறிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் சுமார் இருநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாகியதாகவும் நானூறுக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

மேற்படி வீடுகள் தொண்ணூறுஏக்கர் நிலத்தில் அமைந்திருந்ததாகவும் தீயணைப்பு படையினரோ அன்றி பொலிஸாரே இப்பகுதிகளில் தீ பற்றி எரியும்போது உதவி செய்யவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

**தினேஷ்**

## வெளிவாரி பட்டப்படிப்பு சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இரண்டாம் வருட (பகுதி 1) வணிகமாணி, கலைமாணி வெளிவாரி மாணவர்களது பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ளன இதில் வணிகமாணியில் 32 பரீட்சார்த்திகளும், கலைமாணியில்2?8 பரீட்சார்த்திகளும் சித்தியடைந்துள்ளமை மேற்படி பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பிரிவால் வெளியிடப்பட்ட பரீட்சை முடிவுகளில் இருந்து தெரியவந்திருக்கின்றது.

பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் சுட்டிலக்கங்கள் கீழே தரப்படுகின்றன

| C/ | C/ | C/ |
|---|---|---|
| 911014 | 911016 | 911026 |
| 911028 | 911030 | 911034 |
| 911036 | 911089 | 911095 |
| 911099 | 911100 | 911103 |
| 911105 | 911107 | 911111 |
| 911115 | 911118 | 911119 |
| 911120 | 911152 | 911168 |
| 911176 | 911177 | 911196 |
| 911199 | 911213 | 911214 |
| 911003 | 911071 | 911096 |
| 911133 | 911160. | |

| A | / | A/ |
|---|---|---|
| 91002 | 91003 | 9 005 |
| 91011 | 91012 | 91018 |
| 91019 | 91020 | 91022 |
| 91023 | 91027 | 91029 |
| 91035 | 91037 | 91040 |
| 91047 | 91048 | 91054 |
| 91058 | 91062 | 91065 |
| 91068 | 91074 | 91075 |
| 91076 | 91077 | 91080 |
| 91082 | 91086 | 91093 |
| 91101 | 91103 | 91109 |
| | 91110 | 91114 |
| 91115 | 91119 | 91123 |
| 91126 | 91128 | 91140 |
| 91141 | 91142 | 91159 |
| 91164 | 91170 | 91175 |
| 91176 | 91185 | 91187 |
| 91189 | 91190 | 91192 |
| 91194 | 91196 | 91197 |
| 91202 | 91203 | 91204 |
| 91206 | 91208 | 91211 |

| A | A | A |
|---|---|---|
| 91212 | 91226 | 91249 |
| 91250 | 91253 | 91254 |
| 91255 | 91258 | 91260 |
| 91262 | 91263 | 91264 |
| 91265 | 91267 | 91277 |
| 91278 | 91292 | 91293 |
| 91295 | 91299 | 91310 |
| 91326 | 91335 | 91338 |
| 91342 | 91343 | 91344 |
| 91351 | 91352 | 91354 |
| 91355 | 91358 | 91363 |
| 91365 | 91372 | 91377 |
| 91392 | 91394 | 91395 |
| 91396 | 91397 | 91401 |
| 91404 | 91412 | 91413 |
| 91415 | 91417 | 91418 |
| 91427 | 91434 | 91435 |
| 91436. | | |
| 91438 | 914'1 | 91445 |
| 91447 | 91450 | 91664 |
| 91465 | 91469 | 91475 |
| 91476 | 91482 | 91484 |
| 91487 | 91491 | 91492 |
| 91495 | 91497 | 91498 |
| 91501 | 91502 | 91513 |
| 91515 | 91517 | 91520 |
| 91527 | 91525 | 91530 |
| 91536 | 91537 | 91539 |
| 91541 | 91542 | 91545 |
| 91553 | 91564 | 91566 |
| 91574 | 91575 | 91576 |
| 91578 | 91579 | 91580 |
| 91587 | 91591 | 91601 |
| 91604 | 91612 | 91620 |
| 91621 | 91628 | 91635 |
| 91638 | 91180 | 92645 |
| 92616 | 92647 | 92650 |
| 92653 | 92658 | 92660 |
| 91038 | 91083 | 91084 |
| 91120 | 91121 | 91132 |
| 91160 | 91165 | 91218 |
| 91223 | 91230 | 91274 |
| 91353 | 91359 | 91368 |
| 91387 | 81389 | 91393 |
| 91457 | 91460 | 91472 |
| 91480 | 91531 | 91589 |
| 91603 | 91626 | 91636 |
| 91640 | 92656 | 92657 |
| 92659 | 92664 | 91573 |
| 91598 | (88) | |

## பிரேமா காலத்திலிருந்தே ஐ. தே. க. வுக்கு ஊழல்

### பிரிட்டிஷ் பொருளாதார புலனாய்வு சேவை அறிக்கை

(கொழும்பு)

கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்ற போதும் நிறுவனங்களை மக்கள் மயப்படுத்துகின்ற போதும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் காலததிலிருந்தே ஊழல்கள் நிலவி வருவதாகவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ...

கேள்விப் பத்திரம் வெளியிடுகையில் அதிகாரிகள் பெரியளவில் லஞ்சம் பெறுகின்றனர். கொழும்பிலுள்ள ஜேர்மன் தூதுவராலயத்திலும் கனேடிய, அவுஸ்திரேலிய அரச மட்டங்களிலும் சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கவலையைத் தோற்றுவித்துள்ளனஎ கூறப்படுகிறது

படுத்துவதற்குமாக, சகல அமைச்சுக்களிலும், திணைக்களங்களிலும் பணிபுரிவோரின் விபரங்களையும் முன்னர் இவ் விபரங்களை அனுப்பி வைக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களை அவர் கேட்டுள்ளார்.


# இந்துமத குருமார் ஒன்றியம்

**யாழ். மாவட்டக்கிளை**

**வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகசபைத் தெரிவும்**

திகதி: 3-7-94 ஞாயிறு பி. ப. 2-00 மணி
இடம்: யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
தலைவா: சிவஸ்ரீ சா, சுந்தரேசக் குருக்கள் (உப தலைவர்)

**நிகழ்ச்சி நிரல்**

1. இறைவணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. செயல்திட்டங்கள்
6. புதிய நிர்வாகசபை தெரிவு
7. நன்றியுரை.

மேற்படி இக்கூட்டத்திற்கு இந்துமத குருமார் ஒன்றிய அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நன்றி.

சா. சுந்தரேசக் குருக்கள் — உப தலைவர்
சா சோமாஸ்கந்தசர்மா — பொதுச் செயலாளர்

இந்துமத குருமார் ஒன்றியம், யாழ்ப்பாணம்.

(சி-9734)



# காணவில்லை

எமது பராமரிப்பிலுள்ள மட்டக்களப்பு முனைக்காட்டைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை ஜெயசீலன் (தயா) என்பவர் (வயது 16, உயரம் 6அடி பொது நிறம்) நேற்று 11 மணியளவில் இருந்து (2-7-94)காணவில்லை. அவரைக் கண்டவர்கள திருமதி சாந்தகுமாரி 91, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(8713)



இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


லெப். வீரமணி, லெப். செங்கண்ணன், லெப். ஜீவரஞ்சன், மேஜர் தொண்டமான், கப்டன் சிவலோகன், லெப். நல்லதம்பி ஆகிய 10 கரும்புலிகளினது நினைவுக் கற்களும் இறுதி இராணுவ மரியாதைகளுடன் நாட்டப்படும்.

வடமராட்சி கிழக்கில் கடற்புலிகளின் அரசியல் துறையினரால் இப் பதின்மூன்று கரும்புலிகளின் உருவப் படங்களும் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு எல்லங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் கரும்புலி லெப். கண்ணன் அவர்களுக்கு நினைவுக்கல் நாட்டப்படுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி மாவீரர்களில் கரும்புலி கப்டன் சீராளனின் நினைவுக்கல் மன்னார் மாவீரர் துயிலும் இல்லத்திலும், கரும்புலி கப்டன் கரிகாலனின் நினைவுக்கல் முல்லை மாவட்ட மாவீரர் துயிலும் இல்லத்திலும் நாட்டப்படவுள்ளதாகத தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரும்புலிகள்

புலிகள்'' அடையாளச் சின்னம் பொறிக்கப்பட்ட பதாகைகளைத் தாங்கிய வண்ணம் செல்வதை அவதானிக்க முடிகின்றது.

இவற்றைவிட குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கரும்புலிகள் நினைவாக பல சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான பணிகளில் மக்கள் பலர் ஆர்வத்துடன் கலந்துகொண்டுவருகின்றனர்

குடாநாட்டின் பல பகுதிகளிலும் வீதிகளுக்கு குறுக்கே அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கரும்புலிகளின் உருவப்படங்கள், யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளுக்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முக்கிய இடங்களில் ஒலிபெருக்கிகளில் கரும்புலிகள் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

## தினேஷ்

என அக்கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு பத்துல குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

## தமிழர்

ரஸ் கொழும்பில் மட்டும் போட்டியிடும் சுயேச்சைக் குழுவாக, தங்கள் வேட்பாளர் பட்டியல் அமையும் என அவர் தெரிவித்துள்ளார்

இதேவேளை த. வி. கூ. பிரமுகர்களான சிவசிதம்பரம் நீலன் திருச்செல்வம், தங்கத்துரை ஆகியோரும் குமார் பொன்னம்பலமும் அமைச்சர் தொண்டமானை கடந்த புதன்கிழமை சந்தித்து உரையாடியுள்ளனர்.

## மட்டு.

என்றும், கடையொன்றில் ஏற்பட்ட மின் ஒழுக்கே தீ விபத்துக்கு காரணம் என்றும் மேலும் கூறப்படுகிறது. இத் தீ விபத்தினால் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## கரும்புலிகளின்

களின் சுதந்திரத்திற்காக எமது மண்ணின் விடுதலைக்காக தாமே குண்டாகி எதிரியின் நிலைகளை அழிக்கும் வரை சிரித்து மகிழ்ந்து குலாவிய சம்பவங்கள் தொடக்கம் இறுதியாக கைகாட்டிச் சென்று உறுதியுடன் எதிரி மீது வெடித்து வரலாறாகிய சம்பவங்கள் வரை மிகவும் தரமான முறையில் எடுக்கப்பட்ட படங்களை தொகுத்து விவரணச் சித்திரமாக வெளிவந்துள்ளது.

இந்நாடாவை சகல மக்களும் பார்க்கக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் இந்நாடா இலகுவாகச் சென்றடைய சகல ஒளிப்பதிவு நாடா விநியோகஸ்தர்களும் முழுமையாக ஒத்துழைப்பு நல்க வேண்டுமென நிதர்சனம் நிறுவனம் கேட்டுள்ளது.

பற்றி எரியும்போது உதவி செய்யவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

## போட்டி

வலி. மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலக ஞானவைரவர் சிறுவர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2. 00 மணியளவில் சங்கானை மாலியவத்தை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (41)

## தேசியக்கொடி

மகிமைகளைப் பேச கேட்டுத் துதிப்போம் என யாழ். மாவட்ட அரசியற்துறையினரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான தேசியக்கொடிகளைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோட்ட அரசியல் துறைச் செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும்,

எமது தமிழீழ தேசியக் கொடி 22 அடி உயரக் கம்பத்தில் கொடியிலுள்ள புலியின் பார்வை கம்பத்திற்கு எதிர்த் திசையில் நோக்கும் வண்ணம் கீழிருந்து பறந்துகொண்டிருந்தபடியே மக்கள் எல்லோரும் எழுந்து நின்று வணங்க கொடி ஏற்றுபவர் கொடிக் கம்பத்திற்கும் மக்களிற்கும் இடையில் நிற்காது மக்களைப் பார்க்கும் நிலையில் நின்று கொடியை ஏற்றவேண்டும் எனவும்,

இக் கொடியேற்ற நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக நிற்போர் இக்கொடியேற்றும் வைபவங்களை நாட்டுப்பற்றோடும், தேசிய உணர்வோடும் நின்று அவதானித்து சிறு தவறுகூட ஏற்படாதவாறு சிறப்பாக நிகழ்த்த வேண்டும் எனவும் அச் செய்திக்குறிப்பில்கூறப்பட்டுள்ளது

நிலவி வருவதாகவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா காலத்தில் ஊழல்கள் தொடர்வதாகவும் பிரித்தானிய பொருளாதார விஞ்ஞானிகளின் புலனாய்வு சேவையினரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன

பொலிஸ் தலைமையகங்கள் மீது தாக்குதல் நடாத்த தயாராக இவ்வான் வைக்கப்பட்டிருந்ததாகவும் வடபகுதி மீதான தாக்குதல் நடாத்தப்படாததனால் புலிகளிடமிருந்து தாக்குதல் நடாத்த உத்தரவு பெறப்படவில்லை எனவு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதேபோல் இன்னொரு வானிலும் குண்டுகள் பொருத்தப்பட்டிருப்பதாக விசாரணையிலிருந்து தெரிய வருவதாகவும், அதனைத் தேடும் பணியில் பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டிருப்பதாகவும் விசாரணை நடாத்திய பொலிசார் கூறுகின்றனர்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் கவலையைத் தோற்றுவித்துள்ளன என கூறப்படுகிறது

## முதலிடம்

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயமும் உடுவில் மகளிர் கல்லூரியும் பங்குகொண்ட 17வயதுக்குட்பட்ட வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம் 12 - 10 என்ற கோல் அடிப்படையில் வெற்றியீட்டி உப வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

## யாழ்

மக்களுக்கு சரியான பிரதிநிதித்துவம் கிட்டப் போவதும் இல்லை. மேலும் இராணுவத்தால்மீட்கப்பட்டதாகக் கூறப்படும் பகுதிகளிலும் கூட ஆயுதக் குழுக்களின்நடமாட்டம் இருக்கிறது. இந்நிலையில் சுதந்திரமான பிரசாரம் மேற்கொள்ளப்படுவதற்கோ சுயேட்சையான வாக்குப் பதிவு நடப்பதற்கோ இடமிருப்பதாக இல்லை. எனதெரிவித்தனர்


# யாழ். ஸ்ரீதரில்

காலை 10.30 காட்சியாக
**மே மாத ஒளிவீச்சு**

மாலை 4.00 மணி காட்சியாக
**உயிராயுதம**

மாலை 6.00 மணி காட்சியாக
**JURASSIC PARK**
காண்பிக்கப்படும்.

(சி9872)



**சீதனம் இன்றேல் திருமணம் இல்லை என்னும் வேதனை வாழ்வை வேரோடு சாய்ப்போம்**